அரசு ஊழியர்

மாத இதழ்

2022 ஆகஸ்ட்

மலர்:43 இதழ்:08

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஆசிரியர் குழு:
மு.அன்பரசு, மு.பாஸ்கரன்,
தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன்,
கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி,
சா.டானியல் ஜெயசிங்,
சா.கோதண்டபாணி, அ.குபேரன்

வரைகலை: கார்ட்டூன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி

**முகவரி:**

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:**

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர்
தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

**ஆண்டுச் சந்தா : ரூ.100**
**தனி இதழ் : ரூ.10**

இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளே...

1. **எது சமூக அநீதி?**
   தலைவர் மடல் ............................4

2. **மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மனநிறைவான சந்திப்பு!** ...................6

3. **2022 ஆகஸ்ட் 23 கோட்டை நோக்கி பேரணி தள்ளி வைக்கப்பட்டது ஏன்?**
   பொதுச் செயலாளர் மேசையிலிருந்து..............................7

4. **தேர்தலும் அரசியலும்** ......................14

5. **டி.எல்... இணையிலா ஈரெழுத்துச் சொல்** .........................16

6. **வெல்லமுடியா எண்ணிக்கையில் ஒண்ணா சேரணும் தோழி!**................17

7. **நீ இல்லை என்பது வெறும் தோற்றப் பிழை** ..............................18

8. **இயக்கத்தின் ஆணிவேர்கள்** ...............19

9. **திருவாசகர்** ...................................24

10. **மாலை நேர தர்ணா போராட்டங்கள்** ..25

11. **ஜூலை 2 எழுச்சி நாள் கருத்தரங்கம்**.................................32

# எது சமூக அநீதி?

மரியாதைக்குரிய தமிழக நிதி அமைச்சர் அவர்கள் அரசு ஊழியர்களுக்கு வழங்கும் சம்பளத்தை அரசுக்கு பெரிய சுமையாகவும், அரசு ஊழியர்கள் ஏற்கனவே மாதம் ஒரு லட்சம் வாங்கும் நிலையில் ஊதிய உயர்வு கேட்கிறார்கள் என்று ஊடங்களில் அடிக்கடி பிரச்சாரம் செய்து சமூகத்தில் அரசு ஊழியர்கள் அரசுக்கு பெருஞ்சுமை போல காட்சிப்படுத்துகிறார்.

அரசு ஊழியர்கள் கொரோனா காலத்தில் அரசின் நிதிச்சுமை காரணமாக தங்களின் உரிமைகளான அகவிலைப்படி உயர்வு, சரண் விடுப்பை காசாக்குதல் போன்றவற்றை இக்கட்டான சூழ்நிலையில் அரசாங்கத்துடன் நிற்க வேண்டும் என்ற சமூக அக்கறையில் தங்கள் உரிமைகளை விட்டுக்கொடுத்தனர். இப்படி அரசு ஊழியர்கள் விட்டுக்கொடுத்த உரிமைகளை அரசின் நிதி நிலைமை சீரைடந்த பின்னர் கேட்பது சமூக அநீதி என்று கூறுகிறார் நிதி அமைச்சர்.

ஏதோ ஒருதடவை சமூக அநீதி என்ற வார்த்தை வாய் தவறி வந்து விட்டது என்று அரசு ஊழியர்கள் பெரிதுபடுத்தாமல் விட்டுவிட்டால் மீண்டும் மீண்டும் அதே வார்த்தைகளை சகட்டு மேனிக்கு ஊடகங்களில் மாண்புமிகு நிதியமைச்சர் பேசி வருவது சும்மா இருக்கும் அரசு ஊழியர்களை சீண்டி பார்க்கும் செயல் ஆகும். அதிலும் மாதந்தோறும் முதியோர் பெரும் ஓய்வூதியத் தொகை ரூ.1000/-த்துடன் அரசு ஊழியர்கள் பெறும் ஓய்வூதியத்துடன் ஒப்பிட்டு பேசியிருப்பது அவருக்கு “சமூக நீதி” என்ற வார்த்தைக்கான உண்மையான அர்த்தம் என்னவென்று தெரியுமா என்ற பெரிய சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

அவருக்குத் தெரிய வாய்ப்பில்லை இந்த ரூ.50,000/-, ரூ.100000/- சம்பளம் பெற அரசு ஊழியர்கள் எப்படிஎல்லாம் போராடி இருக்கிறார்கள் என்று. ஆண்டாண்டு காலமாக கோரிக்கை மனு கொடுத்து, பேரணி நடத்தி, உண்ணாவிரதம் இருந்து, சிறைக்கு சென்று, துறைவாரி நடவடிக்கை, வேலை நீக்கம் என படிப்படியான துன்பங்களைத் தாங்கி விடாப்பிடியாக சிறுக சிறுக வந்ததுதான் இன்று நிதியமைச்சர் கண்களுக்கு பெரிதாக விரியும் தொகை.

வேலையே இல்லாமல் லட்சக் கணக்கில் அவனவன் கஷ்டப்படற காலத்தில், போராடும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை இவர்கள் மக்களுக்கான சேவைகளை செய்யாமல் சம்பள உயர்வு கேட்டு போராடுவது அநியாயம் அட்டுழியம் என்று பேசும் பொது மக்களுக்கும் சில நிதர்சனங்களை புரிய வைக்க வேண்டிய நிலை எழுந்துள்ளது.

உங்கள் பக்கத்து வீட்டிலோ தெருவிலோ ஒரு பண்ணை வீடு, ஆடம்பர கார், விலையுயர்ந்த எலக்ட்ரானிக் பொருட்கள் என மிக சொகுசாக இருப்பவர்கள் யார் என பாருங்கள். அரசியல்வாதியோ, தொழிலதிபரோ, வியாபாரிகளோவாகத்தான் இருப்பார்கள். ஆசிரியரோ, அரசு ஊழியரோ, வங்கி ஊழியரோ, அரசு மருத்துவரோ, கிளார்க்கோ இருக்க மாட்டார்!

ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் அரசு ஊழியர்கள் வருமான வரியை பிடித்து கொண்டுதான் மீதியை சம்பளமாக அரசு கொடுக்கிறது. அரசு ஊழியர்களின் சம்பளத்தில் பாதிக்கும் மேல் வருமான வரியாகப் போய்விடும். சிலருக்கு அந்த மாதம் சம்பளமே வராது. அதிகாரிகள் சிலர் கையிலிருந்து பணம் போட்டு வருமான வரி செலுத்துவார்கள்.

இலட்சக் கணக்கில் சம்பாதிக்கும் சுய தொழில் செய்பவர்கள், வியாபாரிகள், வீடுகட்டி வாடகைக்கு விட்டு ஆண்டுதோறும் இலட்சக் கணக்கில் சம்பாதிக்கும் உங்கள் உறவினர்கள் அல்லது நண்பர்கள் அல்லது நீங்கள் யாரும் அரசுக்கு முறையாக வருமான வரி கட்டுவதில்லை. ஆனால் அரசு ஊழியர்கள்தான் இந்த நாட்டில் முறையாக வரி கட்டுபவர்கள். அவர்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் அதில் பாதி மீண்டும் அரசுக்கே வரியாகத்தான் திரும்பவும் போகும் என்பது உங்களில் எத்தனை பேருக்கு தெரியும்?

அரசு ஊழியர்கள் கேட்கும் ஆயிரம் ஐநூறு ஊதிய உயர்வு உங்கள் பாக்கெட்டுகளில் இருந்து பிடுங்குவது போல கோபமாக எதிர்க்கும் நீங்கள், கோடிக்கணக்கில் நம்

வரிப்பணத்தில் கொள்ளையடிக்கும் அரசியல் வாதிகளையோ, வியாபாரிகளையோ, அரசு காண்ட்ராக்டர் களையோ ஏன் எதற்கு என கேட்க முடிவதில்லை. 30 ஆண்டுகள் பணி செய்தும் கூட ஒரு சொந்த வீடு கூட வாங்க முடியாமல் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா..?

"நாங்கள் வேலை இல்லாமல் இருக்கோம், இவர்களுக்கு சம்பள உயர்வா?" என கேட்கும் சகோதர சகோதரிகள், அரசு வேலைக்கான தரம் அறியும் தேர்வில் ஏன் வெற்றி பெற்று வேலைக்கு சேரவில்லை? நான்கரை லட்சம் காலியாக அரசு பணியிடங்களை வைத்துகொண்டு வேலை வாய்ப்பை தராத அரசை எதிர்த்து நீங்கள் எல்லாம் ஏன் கேள்வி கேட்கவில்லை? போராடவில்லை? சம்பளம் கேட்காத, சம்பள உயர்வு கேட்காத, விடுமுறை கேட்காத,லோன் கேட்காத, நிரந்தரபணி கேட்காத நல்லவர்கள் உங்களில் எத்தனை பேர்?

இன்று இவர்கள் ஸ்ட்ரைக் செய்தால் நம்ம தினசரி வாழ்க்கை பாதிக்கும் என நினைக்கும் நீங்கள் அரசு நடத்தவேண்டிய பஞ்சாயத்து தேர்தலை நடத்தி ஊருக்கு ஒரு தலைவரை போடலைன்னு கொதிப்பதில்லையே ஏன்?

ஒக்கி புயல், கஜா புயல் புயல்னு வந்தா நாமெல்லாம் டிவியில பார்த்து உச்ச கொட்டும் போது மழையில் மின் கம்பத்தில் உட்கார்ந்து கொண்டு இறங்கிவந்து உணவருந்த நேரமின்றி கம்பியில் அமர்ந்து உணவருந்தும் மின் ஊழியரை பாராட்டினோம். ஆனால் ஊதிய உயர்வுன்னதும் நம்ம பீரோவில யாரோ கை விட்டதுபோல துடிக்கிறோமே எப்படி? கல் குவாரியை தோண்டும் போது இரவாகி விட்டதால் அங்கேயே படுத்து கொண்டிருந்த அரசு அதிகாரியை பாராட்டினோமே, இப்ப அவர் ஊதிய உயர்வு கேட்டதும் எரிகிறோமே அது ஏன்?

பொண்டாட்டி பிள்ளையை சென்னைல விட்டுட்டு போலீஸ் அதிகாரி எவன் வீட்டு நகையையோ பணத்தையோ மீட்க மொழி தெரியாத வட இந்தியாவில் சுடப்பட்டு இறந்தபோது அய்யோ பாவம் என்றோமே! அவரின் சக ஊழியர் ஆயிரம் ரூபாய் உயர்வு கேட்டதும் நம் அப்பா எழுதி வைத்த சொத்து பத்திரத்தை பிடுங்கியது போல பதறுகிறோமே ஏன்?

ஒரு ஆக்ஸிடென்ட் அல்லது கொலை என்றதும் பார்த்துவிட்டு பரிதாபப்பட்டு வீட்டில போய் படுத்துக் கொள்வோம், ஆனால் அந்த இடத்திலேயே அன்றைய இரவைக் கழிக்கும் காவலர் ஆகட்டும் தாசில்தார் மருத்துவ ஊழியர்கள் சாலை பணியாளர் போன்ற அனைவரும் அரசு ஊழியர்கள் என்பதை நாம் ஏன் சிந்திக்க மறுக்கிறோம்!

12 மாதங்களில் ஒரு மாதம் பள்ளி விடுமுறை விடுகிறார்கள் அந்த ஒரு மாதம் கூட நாம் நம் குழந்தைகளை வீட்டில் வைத்துக் கொள்ளாமல் எங்காவது ஊருக்கு அனுப்பலாமா விடுமுறை பள்ளியில் சேர்க்கலாமா என்று யோசிக்கிறோம். அந்தப் பதினொரு மாதங்கள் இந்த குழந்தைகளுக்காக வேலை செய்யும் அந்த ஆசிரியர்களை பற்றி நாம் என்றாவது சிந்தித்திருக்கிறோமா? அவர்கள் ஊதிய உயர்வு கேட்டதும் நம் வீட்டில் பாதியை பிரித்துக்கொடுக்க கேட்டது போல் துடிக்கிறோமே ஏன்?

பொதுமக்களே அதனால் நீங்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு உதவி செய்ய தேவை இல்லை. அவசியமின்றி எங்கள் மீது கோபப்பட வேண்டாம். எங்களை உதாசீனப்படுத்த வேண்டாம். எங்கள் உரிமையைத்தான் நாங்கள் கேட்கிறோம். நாளை உங்கள் குடும்பத்தில் இருந்தும் யாரவது அரசுப் பணிக்கோ ஆசிரியர் பணிக்கோ வருவார்கள். அவர்களுக்காகவும் தான் நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம்.

"அரசு ஊழியர்கள் வேலைக்காக வந்தவர்கள்" அவர்கள் சட்டப்படி தங்களுக்கு கிடைக்க வேண்டிய ஊதியத்திற்காக போராடுவது சமூக அநீதியாகத் தெரிந்தால், "அரசியலில் நாங்கள் சேவை செய்ய வந்தோம் சேவை செய்கிறோம்" என்று மார் தட்டிக் கொள்ளும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மாதம் ஒரு லட்ச ரூபாய் சம்பளம், ஒரு இன்னோவா கார், ஒரு டிரைவர், காவல் அதிகாரி, மூணு பிஏ, ஒரு பங்களா, ஐந்து பணி ஆட்கள், 3 அலுவலக உதவியாளர்கள், இதர படிகள் என மாதம் 10 லட்சம் ரூபாய் வரை செலவு செய்து ஆண்டுக்கு 12000000 வரை செலவு செய்வது அரசுக்கு சுமை இல்லையா? அப்படி அரசுக்கு நிதி சுமை இருக்கிறது என்றால் இவை எல்லாவற்றையும் வேண்டாம் என கூற முன்வராமல் அதை அனுபவித்துக் கொண்டிருப்பது மட்டும் ``சமூக நீதி``யாகிவிடுமா? மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் !

# மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மனநிறைவான சந்திப்பு !

நிதியமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் அவர்களின் அரசு ஊழியர், ஆசிரியர் நிலைபாட்டை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நேரடியாக தெரிவிக்கும் ஒரு வாய்ப்பு ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பு குழு முதல்வரை 1.8.2022ம் தேதி சந்தித்தபோது வாய்க்கப்பெற்றது. அன்றைய தினம். ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் பணியாளர்கள் தொடர்பான கோரிக்கை மனுவினையும் ஆகஸ்ட் மாத இறுதியில் ஜாக்டோ ஜியோ நடத்தவுள்ள மாநில மாநாட்டிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ள இசைவு வழங்க வேண்டும் என்பதற்கான மனுவினையும் அளித்தோம். மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடனான சந்திப்பின்போது, தொடர்ச்சியாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் பணியாளர்களின் கோரிக்கைகள் குறித்து முரணான தகவல்களை கூறி வருவது குறித்தும், தேர்தல் வாக்குறுதிகளுக்கு எதிராகப் பேசி வருவது குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றோம்.

மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும், 1.1.2022 முதல் வழங்க வேண்டிய 3 சதவித அகவிலைப்படியினை வழங்கிட வேண்டும், காலவரையின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சரண் விடுப்பினை வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்தும் பள்ளிக்கல்வித் துறையால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை 101 மற்றும் 108 ஆகியவற்றை இரத்து செய்ய வேண்டும், பள்ளிக்கல்வி ஆணையர் பணியிடத்தினை இரத்து செய்ய வேண்டும் என்பதனையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தோம்.

மேலும் 2017 முதல் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்போடு மாண்புமிகு எதிர்கட்சித் தலைவராகவும் தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சராகவும் தொடர்ச்சியாக பயணித்துவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஜாக்டோ ஜியோ ஆகஸ்ட் மாத இறுதியில் நடத்தத் திட்டமிட்டுள்ள மாநில மாநாட்டில் பங்கேற்ற வேண்டும் என்ற அழைப்பினை தெரிவித்தது. ஜாக்டோ ஜியோவின் அழைப்பினை ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாநில மாநாட்டில் கலந்து கொள்ள இசைவு அளித்துள்ளார்.

ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் பணியாளர்களின் மீதான தனது நல்லெண்ணத்தை வெளிக்காட்டும் வகையில் அன்றைய சந்திப்பு அமைந்தது. மாண்புமிகு முதல்வரின் நம்பிக்கை அளிக்கும் வாக்குறுதியைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 23.08.2022 ஆம் தேதி நடத்தபட இருந்த கோட்டை நோக்கிய பேரணி, முதல்வர் கண்டிப்பாக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவார் என்ற நல்லெண்த்தின் அடிப்படையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பினால் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 5.8.2022 நடைபெற திட்டமிட்டிருந்த கவன ஈர்ப்பு ஆர்பாட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. மேலும், ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும். அனைத்து ஆசிரியர், அரசு ஊழியர் -பணியாளர் அமைப்புகள் கோரிக்கைகள் தொடர்பாக நடத்தத் திட்டமிட்டுருந்த அனைத்து இயக்க நடவடிக்கைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. ●

## சூடா ஒரு கோப்பை சூப்

**உன்னுள் ஒரு வேங்கை**

**உன்னிடம் ஒரு**
**காட்டுத்தனம்**
**இருக்கிறது - அதை**
**உணர வேண்டும் எனில்**
**உன்னுள் ஒரு**
**ரத்தவெறி கொண்ட**
**வேங்கையாய் நீ**
**அலைந்து**
**திரிய வேண்டும்!**

**- மனுஷ்ய புத்திரன்**



# 2022 ஆகஸ்ட் 23 கோட்டை நோக்கி பேரணி தள்ளி வைக்கப்பட்டது ஏன்?

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம்.*

அரசு இயந்திரத்தின தலைமை பீடத்தில் இருக்கும் தங்களுக்கு அந்த இயந்திரத்தின் அச்சாணியாய் இருக்கும் அரசு ஊழியன் இப்படி ஒரு கடிதம் எழுத வேண்டும் என்பது விருப்பத்தின் வகைப்பட்டது அல்ல. காலமும், சூழலும் தான் இவ்வாறு எழுத வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. நேற்று போல் இருக்கிறது. ஆனால்.. ஒன்றரை ஆண்டுகள் ஓடிவிட்டன... ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னாள் 2021ல் நடந்த சட்டமன்றத் தேர்தலின் போது பிரச்சார மேடைகளில் ஒலித்த உங்கள் குரல்களில் தெறிந்த வார்த்தைகள், வாக்கியங்கள் அர்த்தம் பொதிந்ததாய் பல்வேறு அல்லல்பட்டு வரும் அரசு ஊழியர்களுக்கு அருமருந்தாய் தோன்றியது. விடியல் நிச்சயம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. நம்பிக்கை தரும் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி இந்த ஒன்றரை ஆண்டுகளில் சங்கங்களின் தலைவர்களை சந்திக்கவும், எங்கள் மாநில மாநாட்டிலும் நேரடியாக தேர்தல் கால வாக்குறுதி நிறைவேற்ற வலியுறுத்தி முறையாக ஆசிரியர் அமைப்புகள் முறையீடு கொடுத்தோம். பயனற்று போனதால் பல லட்சம் அரசு ஊழியர்கள் உங்களை நேரில் சந்தித்து முறையிடவே திரண்டு வருகின்றோம் ஆகஸ்ட் 23. ஏன் ? என்ன பிரச்சினை ?

ஏனெனில்.... நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பழைய பென்ஷன் அமல்படுத்துவோம், சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம் எனும் கொத்தடிமை கூலி முறையை ஒழித்துவிட்டு அனைவருக்கும் முறையான காலமுறை ஊதியம் வழங்குவோம் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படும் என.... நாங்கள் மிகுந்த நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் இந்த ஒன்றரை ஆண்டுகளாய் காத்திருக்கின்றோம். ஆனால்....

**தீர்க்கப்படாத பிரச்சினைகள் கொத்தடிமை கூலி முறையை ஒழித்திடுக....**

எங்கே நாங்கள்.... நாங்கள் குறிப்பிடுவது.... ஒரு தலைமுறை முற்றாய் வெந்தணலில் வெந்து வாழ்வை தொலைத்த சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள், வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு முன்பிருந்தே பணியாற்றி வருகின்ற இன்றைய வருவாய் கிராம உதவியாளர்கள், நூல்களை தெய்வமாக மதிக்கும் பண்பாடு மிக்க இந்த நாட்டில் கிராமங்களில் அந்த அரிய பணியை செய்து வரும் கொத்தடிமை கூலிகளான ஊர்புற நூலகர்கள், கொரோனா காலத்தில் உயிரை துச்சமென மதித்து இரவு,பகல் பாராது மக்களுக்கு சேவை ஆற்றிய செவிலித்தாய் என்று கூறப்படும் எம்.ஆர்.பி. செவிலியர்கள், கணினி இயக்குநர்கள், முழு சுகாதார திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், தமிழகத்தின் தெருக்கள் நாற்றமெடுக்காமல் சுத்தம் செய்து வரும் துப்புரவுத் தொழிலாளர்கள், குடிநீர் தேவையை குறைந்த ஊதியத்தில் நிறைவேற்றி வரும் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குநர்கள், தோட்டக்கலை, பண்ணை ஊழியர்கள், வனத்துறை காவலர்கள் என உங்களால் உருவாக்கப்பட்டு இன்று மூன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் அனைத்து துறைகளிலும் நவீன கொத்தடிமைகளாக உள்ளனர். இவர்களோடு சேர்த்து பொது சுகாதாரத்துறை, மருத்துவத்துறையில் அதிக அளவில் ஒப்பந்த முறையில் நியமிக்கப் படுபவர்களையும் சேர்த்துதான்....

நிலங்களில் பாடுபடுகிற.... ஆலைகளிலும், இதர நிறுவனங்களிலும் உழைக்கின்ற அல்லது வேறு ஏதாவது ஒரு வகையில் வேலை செய்கிற அனைவருக்கும் வேலையும், ஓய்வின் முழு சுகத்தையும் அனுபவிக்கக்கூடிய ஒரு தரமான வாழ்க்கையினை உத்திரவாதப்படுத்தக்கூடிய வாழ்க்கையையும், வாழ்வூதியத்தையும் நாடாளுமன்றத்தில் தக்க சட்டம் இயற்றுதல் மூலம் உறுதி படுத்த வேண்டும்

இந்திய அரசியல் சாசன விதி 43 பகுதி 4 இம்மண்ணில் 75 ஆண்டுகளுக்கு முன் ஏற்கப்பட்ட இந்த அரசியல் சாசன விதியின்படியான தங்கள் வாக்குறுதி கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கண்டுகொள்ளப்படவே இல்லையே ஏன் ? என்பது தான் எங்கள் முறையீட்டின் முதன்மை அம்சமாகும்.(இந்த அரசு வரவேண்டும் என நினைத்தவர்கள் நாங்கள்) அரசு என்பது முன் மாதிரியான முதலாளியாகத் திகழ வேண்டும் என்றும், தன் ஊழியர்களுக்கு நியாயமான ஊதியத்தை வழங்க இயலாத நிறுவனங்கள் இயங்கத் தகுதியற்றது என்றும் நீதி மன்றங்கள் சுட்டிக்காட்டியுள்ளன என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

**வறுமை ஒரு பாவமல்ல அது ஒரு சமூகக் கொடுமை...**

ஆம்... அரசு தன்னிடம் பணியாற்றும் லட்சோப லட்சம் ஊழியர்களை அவர்களது குடும்பங்களை தொடர்ந்து வறுமை நிலையிலேயே வைத்திருப்பது என்பது சட்டத்தின் வழி செயல்படும ஜனநாயக அரசுக்கு இலக்கணமாகாது.

எனவேதான் ஒரு நாட்டின் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய வகையில் வேலை அளிப்பவருக்கும், வேலை செய்பவருக்கும் இடையே சம்பளப் பிரச்சினையில் மோதல் ஏற்படக்கூடாது என்பதற்காகவே இந்திய அரசியல் சாசனம் உருவாக்கப்படுவதற்கு முன்பே தேசிய சம்பளக் கொள்கை ஒன்றை அரசு வகுத்தது. அதில் முக்கிய அம்சங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவை

1. நியாயமான ஊதியம் வழங்க பேச்சுவார்த்தையின் மூலம் சமூகத் தீர்வு காணுதல் மற்றும் உரிய சட்டங்கள் இயற்றி செயல்படுத்துதல்
2. எங்கெல்லாம் ஊதியம் அதளபாதாலத்தில் உள்ளதோ அங்கெல்லாம் தலையிட்டு ஊதிய அளவை உயர்த்துதல்
3. மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை உள்ள பல்வேறு படி நிலைகளிலுள்ள வேலைகளில் பணியாற்றும் ஊழியர்களின் ஊதியத்தில் பெருத்த சம்பள வேறுபாடு இல்லாமல் பார்த்துக்கொள்ளுதல்
4. தேசிய உற்பத்தியிலும், தேசிய வருவாயிலும் எல்லோருக்கும் சமபங்கு கிடைப்பதன் மூலம் ஒரு தரமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள போதுமான வருமானத்தை ஒவ்வொருவருக்கும் உத்தரவாதம் செய்தல்.
5. சம்பளம் வழங்குவதில் உள்ள தவறான வழக்கங்களை ஒழித்தல்
6. விலைவாசி உயர்வுக்கு எற்ப சம்பளத்தை உயர்த்துதல்
7. குறைந்தளவு ஊதியத் திட்டத்தை கடுமையாக அமல்படுத்துதல்
8. தொழிலாளர்கள் சுதந்திரமாக வேலை செய்யும் வாய்ப்பை உறுதி செய்தல் என்பன அவற்றில் சிலவாகும்.

மேலும் இந்தியாவில் கடந்த காலங்களில் ஒவ்வொரு ஐந்தாண்டு திட்டங்கள் வகுக்கும்போதெல்லாம் தேசிய சம்பளக்கொள்கை சம்பந்தமாகவும் ஆய்வு செய்து சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பது இதில் அடங்கிய அம்சமாகும்.

தேசிய சம்பளக் கொள்கையின்படி சம்பளம் வழங்குவதை உத்திரவாதப்படுத்திட குறைந்தளவு ஊதியத்திட்டம் 1948 எனும் சட்டம் நாடு விடுதலைப் பெற்றபின் உருவாக்கப்பட்டது. குறைந்தளவு ஊதியம் பற்றி ஆராயும்போது கீழ்க்கண்ட அம்சங்கள் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அவை

1. சட்டத்தால் நிர்ணயிக்கப்படும் குறைந்தளவு ஊதியம்
2. தேசிய அடிப்படையில் குறைந்தளவு ஊதியம்
3. குறைந்தளவு ஊதியம்
4. நியாயமான ஊதியம்
5. வாழ்க்கை ஊதியம்
6. தேவைக்கேற்ற ஊதியம்

இவற்றோடு தொழிலாளர்களை, ஊழியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் கீழ்க்கண்ட ஊக்கச் சலுகைகளும் வழங்கப்பட வேண்டும். அவை

1. மருத்துவம் மற்றும் உடல் நலம் பேணுதல்

2. குழந்தைகளின் கல்வி மற்றும் குடும்ப நலன்

3. விளையாட்டு உடற்பயிற்சி

4. குறைந்த விலையில் உணவு பொருட்கள் வழங்குதல்

5. வீட்டுவசதி

6. சிக்கனம் மற்றும் கடன் திட்டங்கள்

7. ஆயுள் காப்பீடு

மேற்காணும் தேசிய சம்பளக் கொள்கை மற்றும் குறைந்தளவு ஊதியத் திட்டம் 1948ன்படி ஆளும் அரசுகள் தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஊதியம் வழங்கினால் ஊதிய கோரிக்கை சார்ந்த போராட்டங்கள் உருவாக வாய்ப்பே இல்லை. ஆனால் ஆட்சியாளர்கள் இந்த சட்டத்தை கண்டு கொள்ளாத காரணத்தால் நீடித்த போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான ஊதிய பாதுகாப்பான சட்டங்கள் இருக்கும் இன்றைய நிலையில் தொகுப்பூதியம், மதிப்பூதியம் போன்ற கூலி முறைகள் ஏற்புடையதல்ல. அவற்றை ரத்து செய்துவிட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்குக என சங்கங்கள் கோரிக்கை வைத்தால் சத்துணவு, அங்கன் வாடி ஊழியர்கள் குறைந்தளவு நேரம் வேலை பார்க்கும் பகுதிநேர ஊழியர்கள் எனவே காலமுறை ஊதியம் வழங்க முடியாது(39 ஆண்டுகள் பணி புரிந்தவர்கள்) என்ற வாதம் எழுகிறது. சத்துணவு திட்டம் நிரந்தரம். அதில் பணிபுரியும் ஊழியர்கள் நிரந்தரமில்லை. இன்றைய முதல்வர் குழந்தைகள் நலன் கருதி 1முதல் 5 வகுப்பு வரை காலை உணவு வழங்கும் திட்டத்திற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் இத்திட்டத்தை சுய உதவி குழுக்களிடம் கொடுப்பது தவிர்த்து சமூக நலத்துறையிடம் உள்ள சத்துணவு ஊழியர்களை வைத்து அமல்படுத்திட வேண்டுமெனவும் முதல்வரை கேட்கிறோம். அதேபோல் இரவு,பகல் பாராது 24 மணி நேரமும் உழைக்கும் வருவாய் கிராம உதவியாளர்களுக்கும் அடுக்கடுக்காய் அரசு சுமத்தும் பணிகளை அல்லும் பகலும் செய்து வரும் தொகுப்பூதியம், மதிப்பூதியத்தில், சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க மறுப்பது மேற்படி சட்டத்தின்படி முரணாக உள்ளதே. இத்தகைய முரண்பாடுகள் வரக்கூடாது என்பதற்காகத்தான் தேசிய சம்பளக் கொள்கைகளை குறைந்தளவு ஊதியத் திட்டம் 1948ன்படி மிக தெளிவாக உருவாக்கப்பட்டுள்ளன. அதுமட்டும் அல்லாது ஒரு தொழிலாளிக்கு அல்லது ஒரு அரசு ஊழியருக்கு வழங்கப்படும் ஊதியம் எதை அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்பதை சர்வதேச தொழிலாளர் ஆணையமும் தெளிவாக வரையறுத்து கூறியுள்ளதையும் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ஒரு ஊழியர் அல்லது ஒரு தொழிலாளிக்கு வழங்கப்படும் ஊதியம் என்பது அந்த தொழிலாளி, அவர் மனைவி, அவரது ஒரு குழந்தை என 3 அலகுகள் கொண்ட குடும்பத்திற்கு அன்றைய விலைவாசிப்படி என்ன தேவையோ அத்தொகை ஊதியமாக நிச்சயிக்கப்பட வேண்டும் என்று ஐ.எல்.சி (INTERNATION LABOUR COMMISSION) வரையறுத்துள்ளது. ஒரு குடும்பம் என்பதில் தாய், தந்தை சேர்க்கப்படவில்லை என்பது மனித நேயமற்றது என்றாலும் ஊதியம் என்பது பார்க்கும் வேலைக்கானது மட்டுமல்ல. அவ்வூழியரின் ஒட்டுமொத்த குடும்பம் சகல செலவு காரியங்களுக்கான வாழ்வதற்கானது என்பதை மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளதை நாம் காணமுடியும்.

எனவே தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம், தினக்கூலி, அவுட்சோர்சிங்,ஒப்பந்த கூலி போன்ற கொத்தடிமை கூலி முறைகளை ரத்து செய்து விட்டு அனைவருக்கும் முறையான காலமுறை ஊதியம் வழங்க வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

**புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்க**

கடந்த சட்டமன்ற தேர்தலின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதியில் முக்கியமான இன்னொன்று புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்வோம், பழைய ஓய்வூதியம் அமல்படுத்தப்படும் என்பதாகும். ஆனால் தமிழக நிதி அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் பழைய ஓய்வூதியத் திட்டத்தை கொண்டு வருவதற்கு சாத்தியமில்லை என தெரிவித்திருப்பது முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கும் கதையாகும்.

பழைய ஓய்வூதியத் திட்டத்தில் உள்ள சிக்கல்களை முன் கூட்டியே தெரிந்தவர் தான் நமது மாண்புமிகு முதல்வர். அவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்த பின்னர்தான் அவர் அதை மீண்டும் செயல்படுத்த தேர்தல் வாக்குறுதி மட்டுமல்ல நம்முடைய போராட்ட களத்திற்கே வந்து விலக்கிக் கொள்ளச்சொன்னார். ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையத்தில் (PFRDA) உறுப்பினராகவே இல்லாத தமிழ்நாட்டை அதில் உறுப்பினராக உள்ள இராஜஸ்தான் அரசின் நிலையோடு ஒப்பிட்டு நிதியமைச்சர் பேசி இருப்பது அரசு ஊழியர்களிடம் பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஓய்வூதியம் என்பது ஆட்சியாளர்களின் கருணைக்கொடை அல்ல. அவர்கள் போடும் பிச்சையும் அல்ல. மாறாக ஓய்வூதியம் என்பது உழைப்பாளி மக்கள் தங்களின் இடைவிடாத போராட்டங்களின் மூலம் பெறப்பட்ட உரிமையாகும். நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும் பல்லாண்டு காலம் உழைத்து இறுதியில் ஓய்வு பெற்றபின் ஊதியமின்றி எவ்வித சமூகப் பாதுகாப்புமின்றி அரசு ஊழியரும் அவரது குடும்பத்தினரும் நிர்கதியாய் நிற்கும் அவநிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்ற உயரிய நோக்கத்தோடு வழங்கப்படும் கொடுபடா ஊதியமே ஓய்வூதியம் என உச்ச நீதிமன்றமே தெளிவாக்கியுள்ளது.

இந்நிலையில் இத்தகைய உயரிய ஓய்வூதியத் திட்டத்தை காவு கெடுக்கும் வகையில் தமிழகத்தில் கடந்த அரசு 1.4.2003 முதல் புதிய ஓய்வூதியத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு இதுவரை ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர், ஆசிரியர்களிடம் இதற்கான சந்தா தொகையாக ஊதியத்தில் 10 சதவீதம் என்ற அடிப்படையில் இந்த 19 ஆண்டுகளில் பல்லாயிரம் கோடி பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. இதில் செலுத்த வேண்டிய அரசின் பங்கு தொகை பத்து சதவீதம் என்பது மேலும் பல்லாயிரம் கோடியாகும். தமிழக அரசு இன்றுவரை ஓய்வூதிய ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி ஆணையத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை என்றும், இந்த புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கான மசோத கடந்த 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் 4 அன்று சட்டமாக்கப்பட்டுள்ளது என்பதும் நாடாளுமன்றத்தில் இதற்கான வாக்கெடுப்பில் அதிமுக உறுப்பினர்கள் இம்மசோதாவிற்கு எதிராக வாக்களித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்(பத்தாண்டு ஆட்சியில் இருந்தபோது பழைய பென்சன் அமல்படுத்தவில்லை) இந்நிலையில் தமிழக அரசுத்துறைகளில் ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் பணியாற்றி இறந்துபோன ஆயிரக்கணக்கான ஊழியர்களின் குடும்பத்தினருக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் இத்திட்டத்தில் பணியாற்றி ஓய்வு பெறும் ஊழியருக்கும் (டீநே கூ்அந ளுநவவடநஅநவே) செலுத்திய தொகையை ரூ.20க்கான பத்திரத்தில் எழுதி வாங்கி கொண்டு வழங்கியிருக்கிறது என்பது மிகுந்த வேதனைக்குரிய ஒன்றாகும்.

**ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வை மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்குவதே உண்மையான சமூக நீதியாகும்.**

ஒன்றிய அரசு எத்தனையோ மக்கள் விரோத திட்டங்களையும், கொள்கைகளையும் அமல்படுத்தினாலும் அகவிலைப்படி உயர்வில் மட்டும் எந்தவித சமாதானமும் சொல்லாமல் அதன் ஊழியர்களுக்கு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அகவிலைப்படியை அந்தந்த கால விலைவாசிக்கு ஏற்றவாறு உயர்த்தி வழங்கி வருகிறது. அதன்படி 1.1.2022 முதல் ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு 3சதவீதம் அகவிலைப்படி வழங்கியுள்ளது. அதை தொடர்ந்து 1.7.2022 முதல் அடுத்த அகவிலைப்படி உயர்வு 4 சதவீதம் அறிவிக்கப்படும் என்ற செய்தி, ஆனால் தமிழக அரசு மட்டும் அகவிலைப்படி உயர்வினை தராமல் இருப்பது சமூக நீதி கோட்பாடுகளுக்கு எதிரானதாகும். நாட்டின் உணவுப் பொருட்கள் உட்பட அனைத்து பொருட்கள் விலைவாசி உயர்வுக்கேற்ப மாண்புமிகு முதல்வர் அவர்கள் அகவிலைப்படி உயர்வை ஒன்றிய அரசு அறிவித்தவுடன் உடனடியாக அறிவிக்க வேண்டும்.

**சரண்விடுப்பு ஒப்புவிப்பு மறு உத்திரவு வரும் வரை நிறுத்தி வைப்பது அரசு ஊழியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தற்பொழுது காலவரை குறிப்பிடாமல் நிறுத்தி வைத்துள்ளது எவ்வகையிலும் நியாயமானதில்லை. அதனால் சரண்விடுப்பு ஒப்புவிப்பு செய்ய விதிக்கப்பட்டிருக்கும் தடையை உடனடியாக நீக்க வேண்டும் என்று எதிர்கட்சித் தலைவராக இருந்தபோது மாண்புமிகு முதல்வர் பேசியது ஞாபகம் இருக்கிறது. அரசு ஊழியர்கள் காலம்காலமாக தங்கள் ஈட்டிய விடுப்பை சரண் செய்து ஊதியம் பெற்றுக்கொள்ளும் ஏற்கனவே இருந்த நடைமுறையை உடன் அமல்படுத்திட வேண்டும்.

### 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை வழங்குதல்

தமிழகத்தில் உள்ள ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், உயர்நீதிமன்ற நீதிபதிகள் 1.1.2016 முதல் ஊதிய மாற்ற நிலுவைத் தொகை பாக்கியின்றி பெற்று விட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர் முதல் அமைச்சர் வரை 100 சதவீதம் சம்பள உயர்வு பெற்று விட்டார்கள். ஐ.ஏ.ஏஸ், ஐ.பி. எஸ் அலுவலர்கள் ஊதிய மாற்ற நிலுவை பெறும்போது அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு மட்டும் வழங்கப்படாதது சமத்துவம், சம உரிமை பேசும் மக்களாட்சி அரசுக்கு விரோதமானதாகும்.

### சாலைப் பணியாளர் 41 மாத பணி நீக்கக் காலத்தை பணிவரன் முறை செய்ய வேண்டும்.

உலகமய அரக்கனின் கோரப்பசிக்கு தமிழக அரசால் பலியாக்கப்பட்ட சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்கக் காலம் நாளது வரை வரன் முறைப்படுத்தபடாததோடு அக்கால கட்டத்தில் அகால மரணமடைந்த ஊழியர்களின் வாரிசுகளுக்கு நிபந்தனையின்றி கருணை அடிப்படையில் பணி நியமனம் இது நாள் வரை வழங்கப்படவில்லை.

### காலிப்பணியிடங்கள் நிரப்பிடுக

தமிழகத்தில் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஒரு கோடியை நெருங்கி கொண்டிருக்கிறது. பதிவு செய்யாதவர்கள் எண்ணிக்கை இதற்கு மேலானதாக இருக்க வாய்ப்புள்ளது. அதே நேரத்தில் அரசுத்துறைகளில் பல ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட பணியிடங்களில் நாலரை லட்சம் பணியிடங்கள் காலியாக உள்ளன. இன்றைய மக்கள் தொகை மற்றும் அதிகரித்துள்ள புதிய புதிய திட்டங்களுக்கு ஏற்ப மேலும் சில லட்சம் பணியிடங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஆனால் அதற்கு மாறாக மறு சீரமைப்பு என்ற பெயரால் அரசுத் துறைகள் சீரழிக்கப்பட்டு வருகின்றன. வேலை வாய்ப்பு மறுக்கப்பட்ட இளைஞர்கள் வாழ்க்கை தேவைகளுக்கு வேறு வழியின்றி பல்வேறு சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே வேலையின்மை என்பது சமூகப் பிரச்சினையாக மாறியுள்ளது. இந்நிலையில் தமிழக அரசு துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களில் வேலையற்ற இளைஞர்களுக்கு முறையான வேலைவாய்ப்பை வழங்காமல் அரசு துறைகளில் அவுட் சோர்சிங், ஒப்பந்த நியமன முறை, தொகுப்பூதிய நியமன முறைகளை மேற்கொள்வது ஏற்புடையதல்ல.

அதே போல் கருவூலத்துறை விப்ரோ வசம் உள்ள ஐகுழசுஆளு திட்டத்தில் குளறுபடிகள் மற்றும் குறைகளை சரி செய்து தமிழக அரசு ஏற்று நடத்த வேண்டும்.

### மருத்துவ காப்பீட்டுத் திட்டம்

அரசு ஊழியருக்கு வழங்கப்படும் மருத்துவப்படி ரூ.300 மட்டுமே. இது இன்றைய காலச் சூழலில் எந்த வகையில் ஏற்புடையதாக இல்லை. மருத்துவப் படியை உயர்த்தி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக கேட்பாரற்றுக் கிடக்கும் நிலையில், தமிழக அரசு ஊழியர்களுக்கு கட்டணமில்லா சிகிச்சை அளிக்கப்போவதாக அறிவித்து அதற்கு ஒரு பெருந்தொகையை ஊழியர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்து காப்பீட்டு நிறுவனத்திடம் செலுத்துவதன் மூலம் அத்திட்டத்தை செயல்படுத்தி வரும் அரசு தனியார் கொள்ளை லாபம் சம்பாதிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. நோய்வாய்ப்பட்ட அரசு ஊழியர் அதற்கான செலவின் முழுத்தொகையை பெறுவதென்பது இன்றளவும் சாத்தியமற்றதாகவே உள்ளது. ஆனால் ஆந்திரா போன்ற அண்டை மாநிலங்களில் மருத்துவ காப்பிட்டு நிறுவனத்தை அரசு உருவாக்கி நடத்தி வருகிறது என்பதும் அங்கு அரசு ஊழியரிடம் இருந்து எவ்விதத் தொகையும் பிடித்தம் செய்யப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**கடந்த இரண்டு ஆண்டுகளாக விடுவிக்கப்படாத கொரோனா சிகிச்சைக்கான தொகையை உடனே விடுவிக்க வேண்டும்.**

கொரோனா காலத்தில் இறந்த அரசு ஊழியர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு நிபந்தனையின்றி கருணை அடிப்படை நியமனம் வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களே!**

இங்கே சுட்டிக் காட்டபட்டவை தீர்க்கப்படாத பிரச்சினைகளில் சில மட்டுமே. பட்டியலிட்டால் பக்கங்கள் போதாது. இந்தப் பிரச்சினைகளுக்காக....இந்தக் கோரிக்கைகளுக்காக.... அதன் நியாயங்களை தங்களிடம் எடுத்துரைப்பதற்காக.... தங்களை நேரில் சந்தித்தோம். அந்த சந்திப்பு முழுமையானதாக இல்லை. அதன் பிறகு தங்களை சந்திக்க இருந்த ஒன்றரை ஆண்டுகளில் எடுத்த முயற்சிகள் எண்ணிலடங்கா.... தங்களை சந்திக்க முடியவில்லை என்பது மட்டுமல்ல.... தலைமைச் செயலாளரைக்கூட சந்திக்க முடியவில்லை. எனவே ஒன்றரை ஆண்டுகளில் மட்டும் எண்ணற்ற இயக்கங்களை நடத்திய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்... முத்தாய்ப்பாக கடந்த 2022 ஜுன் 20 முதல் 24 வரை தமிழகத்தின் ஏழு முனைகளிலிருந்து ஊழியர் சந்திப்பு இயக்கத்தை நடத்தியது.

அதற்குப் பின்னும் பிரச்சினைகள் தீர்க்கப்படாததால் இதோ திரண்டு வருகிறோம் லட்சம் அரசு ஊழியர்கள் 2022 ஆகஸ்ட் -23ல்... மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில நிர்வாகிகளை, ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகளை அழைத்து பேசி கோரிக்கைகளை நிறைவேற்றுவார் என்று மட்டும் சொல்ல அல்ல...அவ்வாறு கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை எனில் சக்தியான வலுமிக்க போராட்டங்கள் நடைபெறும் என்பதையும் சொல்லவே வருகின்றோம்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களே**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசு ஊழியர்களுக்கு சம்பளம், போனஸ், பஞ்சப்படி வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளுக்காக மட்டும் போராடுகிற அமைப்பு அல்ல. களத்தில் மக்களை பாதிக்கும் எதுவாக இருந்தாலும் ஊழியர்களை திரட்டுவதும், முஷ்டி உயர்த்தி குரல் கொடுப்பதும் என்ற பாரம்பரியம் கொண்டது என்பது தாங்கள் அறிந்ததே.

இப்போதும் கூட... பெருந்தொற்று கொரோனா காலத்திலும் தமிழகத்தில் பெய்த கடும் மழை வெள்ளத்தால் குறிப்பாக சென்னை மக்களோடு மக்களாய் அனைத்து அரசு ஊழியர்களும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவையனைத்தையும் துச்சமெனக் கருதி வீடு வாசல், குடும்பம் அனைத்தையும் புறம் ஒதுக்கி விடுப்பு ஏதும் எடுக்காமல் மக்கள் துயர் துடைக்க களமிறங்கி பணியாற்றினார்கள். லட்சோபலட்சம் அரசு ஊழியர் சங்க உறுப்பினர்களாக உள்ள சங்கம் தான் என்பது குறிப்பிடத்தக்கது. அது மட்டுல்லாது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொரோனாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உதவிட தன் உறுப்பினர்களிடம் உண்டியல் ஏந்தி நிதி வசூல் செய்து வரும் அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தான்.

இப்போதென்றல்ல... முன்பு சுனாமியின் போதும், தானே புயலின்போதும் ஏன் ? கடந்த காலங்களில் ஒரிசா, குஜராத், ஆந்திரா மாநிலங்களில் ஏற்பட்ட இயற்கை சீற்றங்களின் போதும் இன்னும் சர்வதேச அளவில் கியூபா, நேபாளம் என எங்கெல்லாம் மக்கள் பாதிக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் மக்கள் துயர் துடைக்கும் நிவாரணப் பணிகளுக்காக தன்னால் ஆன அனைத்து உதவிகளையும் செய்துள்ளது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

இத்தகைய சமூகப் பார்வை கொண்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் இன்று தமிழக அரசிடம் முன் வைத்துள்ள கோரிக்கைகள் வெறும் பொருளாதாரக் கோரிக்கைகள் மட்டுமல்ல. அவை சமூக நலன் சார்ந்ததும்தான். தமிழகத்தின் வளர்ச்சிக்காக, தமிழக மக்களின் நலனுக்காக என்று சொல்லி யார் யாருக்கோ நேரம் ஒதுக்கி பல புரிந்துணர்வு ஒப்பந்தகங்களை மேற்கொண்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களே, அரசு இயந்திரத்தின் அச்சாணியான லட்சோபலட்சம் அரசு ஊழியர்களின் நம்பிக்கை நட்சத்திரமாய் திகழும் மக்கள் நல இயக்கமான தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில நிர்வாகிகளை சந்திக்க நேரம் ஒதுக்கி அழைத்து பேசி கோரிக்கைகளை

நிறைவேற்ற முன்வர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

தோழர்களே! இதுவரை தமிழக அரசு கடைபிடித்து வந்த அணுகுமுறையில் இந்த சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள வலி, வேதனை உணரப்படவேண்டும். உணர்த்தப்பட வேண்டும்.

தான் ஏற்படுத்தும் வலி குறித்து பாராமுகமாக இருப்பவன் தீர்ப்பு கூறும் உரிமையை இழந்து விடுகிறான் என்றார் தேசியக்கவி இரவீந்திரநாத் தாகூர். ஆம். அந்த வலியை உணராதவர்களுக்கு தீர்ப்பளிக்கும் உரிமையும் இல்லை என்பதே உண்மையாகும். அத்தகைய சூழலில் நல்ல தீர்ப்புக்காக அதை வழங்குவதற்காக உழைக்கும் மக்களின் குரல் ஓங்கி ஒலிக்கும் என்பது யதார்த்தமே. அரசு என்பது அடக்கு முறைக் கருவி என்ற இலக்கணத்திற்கு மாறாக உரிமை கோரி ஒலிக்கும் குரல்களோடு பேசி பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன்வர வேண்டும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எங்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவார் என்ற மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளோம்.

அதற்கு மாறாக அதே அடக்குமுறைகளும், அசட்டையான போக்கும் தொடரும் பட்சத்தில் முஷ்டி உயர்திய நம் முழக்கங்கள் என்றென்றும் தவிர்க்க முடியாததே. அதே போல் அன்று தூக்கு மேடையில் நின்று கொண்டு சிகாகோ தியாகி ஆகஸ்ட் ஸ்பைஸ் சொன்னானே...

“நேரம் வரும் அப்பொழுது
எங்களது மௌனம்
மிக சக்தி வாய்ததாக இருக்கும்
இன்று நீங்கள் குரலை
நெறிப்பதை விட...”!

இந்த கட்டுரை பிரசுரத்திற்கு போகுமுன் உங்களிடமிருந்து அழைப்பு வகுறிது. நீங்கள் நேரில் சந்தித்துப் பேசி ஜாக்டோ - ஜியோ நிர்வாகிகளிடம் சிலவற்றையேனும் நிறைவேற்றுவதாக உறுதி கூறி அனுப்பியிருக்கிறீர்கள். உங்கள் பார்வையில் நீங்கள் சொன்ன வார்த்தையில் அரசு ஊழியர் ஆசிரயர் சமுதாயத்திற்கு நிச்சயம் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. உங்ககள் வார்த்தைகளுக்கு மதிப்பளித்து எங்கள் போராட்டங்களை நிறுத்திவைக்கிறோம். ஆகஸ்ட் 23 கோட்டை பேரணிக்கு அவசியம் இல்லாமல் செய்யட்டும் உங்கள் அறிவிப்பு. நடைபெற இருக்கும் மாநாடு நிச்சயம் நன்றி அறிவிப்பு மாநாடாக நடக்கும். உங்கள் மீதான முழு நம்பிக்கையில் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் ●



கட்டுரை



# தேர்தலும் அரசியலும்

- இரா.மங்களபாண்டியன்

ஒன்றிய அரசு நாடாளுமன்ற மக்களவைக்கும், மாநில சட்டமன்ற பேரவைகளுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடத்த வேண்டும் என வலியுறுத்துகிறது. குடியரசுத் தலைவர், நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சமயத்தில், ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டியது தொடர்பாக ஒரு விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று அறைகூவல் விடுத்திருக்கிறார். அப்போதுதான் அரசியல் கட்சிகள் மத்தியில் இப்பிரச்சனை தொடர்பாக ஒரு கருத்தொற்றுமைக்கு வர முடியும் என்றும் கூறியிருக்கிறார்.

அடிக்கடி தேர்தல்கள் நடத்தப்படுவதால் அரசின் கஜானாவிற்கு அதிக செலவு பிடிக்கிறது என்றும் எனவே ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடத்தலாம் என்றும் இவர்களால் விளக்கம் அளிக்கப்படுகிறது. மேலும், தேர்தலுக்கு முன்பு அமல்படுத்தப்படும் ‘தேர்தல் நடத்தை விதி” (Model Code of Conduct) காரணமாக, வளர்ச்சித் திட்டங்களின் கீழான நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைகின்றன என்றும் இவர்கள் இதுகுறித்து விவாதத்தை முன்வைக்கிறார்கள். மேலும், ஒவ்வோராண்டும் தேர்தல்கள் நடைபெறுவதால் மனிதவளம் மீது பெரும் சுமை ஏற்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

நாடாளுமன்ற மக்களவைக்கும், மாநில சட்டமன்ற பேரவைகளுக்கும் ஒரேசமயத்தில் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்பதற்கு எதிராக முன்வைக்கப்படும் வாதங்கள் தொழில்நுட்பரீதியானதாகும். ஒரே நேரத்தில் தேர்தல் என முன்வைக்கப்படும் கருத்தாக்கம் என்பது அடிப்படையில் ஜனநாயக விரோதமானது என்பதாலும் மற்றும் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையின் ஆணிவேரையே பிடுங்கி எறியக்கூடியது என்பதாலும்தான் இதனைக் கடுமையாக எதிர்க்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

நாடாளுமன்ற மக்களவைக்கும், மாநில சட்டமன்ற பேரவைகளுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடத்துவது, அரசாங்கங்கள் நாடாளுமன்ற சட்டமன்றங்களுக்குப் பதில் சொல்லும் பொறுப்பிலிருந்து தங்களைக் கழற்றிக் கொள்வதற்கு இட்டுச் செல்லும். இது அரசமைப்புச் சட்டத்தின் கீழான பொறுப்புகளை மீறும் செயலாகும். அரசமைப்புச் சட்டத்தின்கீழ், ஓர் அரசாங்கம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது தோல்வி அடைந்தாலோ அல்லது நிதிச்சட்டமுன்வடிவில் தோல்வி அடைந்தாலோ அந்த அரசு ராஜினாமா செய்யக் கடமைப்பட்டதாகும். அதன் பின்னர் மாற்று அரசாங்கம் அமைக்கப்படாவிட்டால் அவை கலைக்கப்பட்டு இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டும், நாடாளுமன்ற மக்களவைக்கோ அல்லது மாநில சட்டப் பேரவைக்கோ அரசமைப்புச் சட்டத்தின் கீழ் நிலையான பதவிக்காலம் நிர்ணயிக்கப்படவில்லை.

ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்பதற்காக, அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவருவதற்காக, ஏராளமான பரிந்துரைகள் முன்வைக்கப் பட்டிருக்கின்றன. இது தொடர்பாக, நிதி ஆயோக் வெளியிட்டுள்ள பரிந்துரைகளில் ஒன்று, மக்களவைக் கலைக்கப்படுவது தவிர்க்கப்படமுடியாத நிலை உருவானால் மற்றும் மீதமுள்ள மக்களவைக்கான பணிக்காலம் குறுகியதாக இருக்குமானால், அத்தகு சமயங்களில் மீதமுள்ள காலத்திற்கு குடியரசுத்தலைவர் ஆட்சியை நீடித்திடலாம் என்பதாகும். இதற்காக அடுத்த தேர்தல் நடந்து, புதிதாக தேர்ந்தெடுக்கப் பட்டவர்களால் புதிய அமைச்சரவை அமையும்வரைக்கும், குடியரசுத் தலைவர், தனக்கு அறிவுரைகள் வழங்குவதற்காக தனக்கு வேண்டிய நபர்களைக் கொண்டு ஓர் அமைச்சரவையை அமைத்துக்கொள்வார். இந்த

முன் மொழிவு குடியரசுத்தலைவரை ஆட்சியை நடத்திடும் தலைவராக மாற்றிவிடும். இது, நாட்டை ஆளுவதற்காக, குடியரசுத் தலைவரை பின்புற வழியாக கொண்டுவரும் ஏற்பாடேயாகும்.

இது தொடர்பாக மற்றொரு அனுமானமும் முன்வைக்கப்படுகிறது. அது என்னவென்றால், இவ்வாறு ஓர் அவை கலைக்கப்பட்டால், அந்த சமயத்தில் அதன் மீதமுள்ள பணிக்காலம் அதிக காலத்திற்கானதாக இருக்குமாயின், தேர்தல் என்பது மீதம் உள்ள பணிக்காலத்திற்கு மட்டும்தான் நடைபெறுமாம். அதாவது, மக்களவைக்கு இரண்டு ஆண்டு காலம் நீடித்திருந்தபின் கலைக்கப்படுமாயின், பின்னர் நடைபெறவிருக்கும் தேர்தலின் மூலம் புதிதாக பணியேற்பவர்கள் மீதமுள்ள மூன்று ஆண்டு காலத்திற்குத்தான் பொறுப்பிலிருப்பார்கள்.

எனவே, உண்மையில் இவ்வாறு அடிக்கடி தேர்தல்கள் நடைபெறுமாயின், இவர்கள் கூறும் ஒரே சமயத்தில் மக்களவைக்கும், பேரவைகளுக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்பதற்கான நோக்கமே அடிபட்டுப் போகிறது. அதே போன்று, சட்டமன்ற பேரவைகள் தன்னுடைய பணிக்காலத்தில் பெரும்பகுதி கழிந்த பின்னர், கலைக்கப்படுமாயின், மீதமுள்ள பணிக்காலத்திற்கு அந்த மாநிலத்தின் ஆளுநர், ஆட்சியை நடத்திடுவார். இந்த ஏற்பாடும் மத்திய ஆட்சி அங்கே கொண்டுவரப்படுகிறது என்பதன் பொருளேயாகும்.

மக்களவையையும், மாநில சட்டமன்றப் பேரவைகளையும் சீரமைத்திடுவதற்காக முன்வைக்கப்படும் மற்றொரு வழி, இதற்காக சில சட்டப் பேரவைகளின் காலத்தை நீட்டிப்பது அல்லது குறைப்பது என்பதாகும். உதாரணமாக நிதி ஆயோக், அளித்துள்ள முன்மொழிவில் திரிபுரா மாநில பேரவையின் பணிக்காலத்தை 15 மாதங்களுக்கு வெட்டியும், பீகார் மாநில பேரவையின் பணிக்காலத்தை 13 மாதங்களுக்கு நீட்டித்தும் பரிந்துரைத்துள்ளது. இவ்வாறு ஒரு பேரவையின் பணிக்காலத்தை வெட்டுவதோ அல்லது நீட்டிப்பதோ ஜனநாயக விரோதமான செயலாகும். நாட்டின் குடிமக்கள் தங்கள் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் அடிப்படை உரிமையைப் பறித்திடும் செயலாகும்.

ஆட்சியாளர்கள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றங்களுக்குப் பதில் சொல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே தந்திரமான விதத்தில் பல்வேறு யோசனைகளையும் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் முன்மொழிந்திருக்கிற மற்றுமொரு பரிந்துரை என்னவெனில், ஓர் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்தால், அப்போதே அவையின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கும் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறது.

இதன் பொருள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் அரசாங்கத்தை அப்புறப்படுத்துவதற்காக தாங்கள் பிரயோகிக்க இருக்கும் உரிமையின்மீது கட்டுப்பாடுகளைக் கொண்டு வருவதோடு புதிய அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற நிபந்தனையும் விதிப்பதாகும். நாடாளுமன்ற, மக்களவை மற்றும் சட்டமன்றப் பேரவைகளின் ஆட்சிக்காலம் குறித்த இத்தகைய எண்ணவோட்டங்கள் ஆளும் வர்க்கங்களின் எண்ணவோட்டங்களேயாகும். இவை நவீன தாராளமயக் கொள்கைகளுடன் முழுமையாக ஒத்துக் போகின்றவைகளாகும். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிக்கும் உரிமைக்குக் கட்டுப்பாடுகள் விதிப்பதையோ, அல்லது பெரும்பான்மையுடன் ஆட்சி நடத்தும் மாநில அரசாங்கத்தை மத்திய அரசு கலைத்துவிட்டு, புதிதாகத் தேர்தல் நடத்துவதையோ ஏற்க முடியாது.

இந்தியா பல்வேறு அரசியல் கட்சிகளுடன் பல்வேறு கலாச்சாரங்களுடன் உள்ள மாபெரும் நாடாகும். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து கொண்டு செல்லக்கூடிய விதத்தில் கூட்டாட்சித் தத்துவத்துடன் அமைந்துள்ள அரசியல் ஜனநாயகம்தான் இங்கே நிலைத்து நிற்க முடியும். பல்வேறு மாநிலங்களுக்கும் பல்வேறு சமயங்களில் தேர்தல்கள் நடைபெறுவது கூட்டாட்சி அமைப்பின் கூறுகளில் ஒன்றாகும்.

ஒன்றிய அரசின் 'ஒரே தேசம் ஒரே தேர்தல்" என்கிற முழக்கமானது. 'ஒரே தேசம் ஒரே கலாச்சாரம் ஒரே மொழி" என்று நம்பிக்கொண்டிருப்பதுடன் ஒத்துப் போகின்ற ஒன்று. அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தி, ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடத்த வேண்டுமென்கிற கருத்தாக்கம், மத்திய எதேச்சதிகாரத்துவத்தையே வளர்த்திடும். இது உறுதியுடன் எதிர்க்கப்பட்டு, முறியடிக்கப்பட வேண்டியதாகும். ●

# டி.எல்...
# இணையிலா ஈரெழுத்துச் சொல்

- பெரணமல்லூர் சேகரன்

டி.எல். என அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர் தோழர் தே. லட்சுமணன். தோழர் தே லட்சுமணன் தாம் அரசுப் பணியில் இருக்கும்போது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை உருவாக்கப் பாடுபட்டவர். அவர் பணி புரிந்த கால்நடைத்துறையில் தமிழ் நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தை உருவாக்கி மாநிலப் பொதுச்செயலாளராக செயல்பட்டவர். தமது அரசுப் பணியிலிருந்து விருப்ப ஓய்வில் சென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் முழுநேர ஊழியராக பணியாற்றினார். கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர், மாநில செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் திறம்படப் பணியாற்றினார்.

மாற்றுத் திறனாளிகளுக்காக, சிறுபான்மை மக்களுக்காக, சமூக மாற்றத்திற்காக தனது இறுதி மூச்சுவரை உழைத்துக் கொண்டிருந்தார். எந்நேரமும் ஏழை, எளிய பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சனைகள் குறித்து சிந்தித்துக் கொண்டிருப்பார். அனைத்து நூல்களையும் தேடித் தேடி படிப்பார். வரலாற்று நிகழ்வுகளை அவருடன் இருக்கும் நபரிடம் சுருக்கமாக புரியும்படி எடுத்துரைப்பார்.

அவர் செங்கல்பட்டில் பாரதி மன்றத்தை உருவாக்கி அதன் ஆலோசகராக இருந்து முற்போக்குக் கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் சென்றவர். இந்த பள்ளியில் இலவசமாக ஏழை, எளிய பிரிவினருக்காக செயல்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் இருக்கக் கூடிய 250க்கும் மேற்பட்ட சிறப்பு பள்ளிகளை ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கி அதற்கும் தலைவராக இருந்து திறம்பட செயல் பட்டவர். இன்று மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் 1,500 ரூபாய் உதவித் தொகை பெறுகிறார்கள் என்றால் அதற்கு காரணம் தோழர் டி.எல். தான். தற்போது 4 லட்சத்து 80 ஆயிரம் குழந்தைகள் அந்த உதவித் தொகையை பெற்று பயன் பெறுகிறார்கள்.

இவர் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் நாள் கொரோனா தீநுண்மிக்குப் பலியானார். ஆகஸ்ட் 24: தோழர் தே. லட்சுமணன் நினைவு நாள்

## "பஞ்ச்"
மொரப்பா

### மிக்க மகிழ்ச்சி!

ஒரு மணி நேரம்
மகிழ்ச்சியாக
இருக்க வேண்டுமெனில்
துயில் கொள்ளுங்கள்!

ஒருநாள்
மகிழ்ச்சியாக
இருக்க வேண்டுமெனில்
மீன் பிடிக்கச் செல்லுங்கள்!

ஒரு மாதம்
மகிழ்ச்சியாக
இருக்க வேண்டுமெனில்
மணமுடியுங்கள்!

ஓராண்டு
மகிழ்ச்சியாக
இருக்க வேண்டுமெனில்
செல்வத்தைப் பெறுங்கள்!

வாழ்நாள் முழுவதும்
மகிழ்ச்சியாக
இருக்க வேண்டுமெனில்
உங்களால் முடிந்த அளவுக்கு
பிறருக்கு உதவுங்கள்!



- சீனப் பழமொழி

# வெல்லமுடியா எண்ணிக்கையில் ஒண்ணா சேரணும் தோழி!

- ஆர்.நடராஜன்

அடிமை விலங்கை உடைத்து
மிடுக்காய் வாழ வழிகாட்டும்
அமைப்பைப்பத்தி பேசணும் தோழி!

வெளியில் வந்து பேசணும்
வெல்லமுடியா எண்ணிக்கையில்
ஒண்ணா சேரணும் தோழி!

கள்ளிப் பாலுக்கு தப்பிவந்த
காரணத்த பேசணும்.

கல்வி கற்க தடையுடைத்த
கதையை நாம பேசணும்.

சிறுவயது திருமணத்தை தடுத்து
சீர்படுத்திய வரலாற பேசணும்.

பாலியல் ஒடுக்குமுறை
பாதிப்புக்கு எதிரா
ஆவேசமா போராடி
நீதியை நிலைநாட்டும்
போராளிகளோடு பேசணும்!

சமையல் கட்டுல வெந்தத மாத்தி
படி தாண்டி
வேலையில சேரவச்ச
புரட்சியை நாம பேசணும்!

சம வேலைக்கு
சம ஊதியம் கேட்கும்
இயக்கத்தோடு பேசணும்!


பேருந்து இருக்கையிலிருந்து
நாடாளுமன்ற நாற்காலி வரைக்கும்
இடஒதுக்கீடு
உரிமை கேட்கும்
இயக்கத்தோடு பேசணும்!

மனசுக்கு புடிச்ச
இணையோடு சேர்ந்து வாழ,
விருப்பமில்லா உறவை பிரியும்
உரிமை கோரும்
இயக்கம் பற்றி பேசணும்!

சார்ந்து வாழும்
நிலையை மாற்றி
சாதித்து காட்டும்
இயக்கத்தில் சேர்ந்து

முகப்பில் நின்று பேசணும்
முற்போக்காய் வாழணும்!

வெல்லமுடியா எண்ணிக்கையில்
ஒண்ணா சேருவோம் தோழி!







# நீ இல்லை என்பது வெறும் தோற்றப் பிழை!

எத்தனை போராட்டங்கள்
நிகழ்ந்தாலும்
நிமிர்ந்து நிற்பதென்னவோ
நீ பிடித்த கொடிதான்!

எத்தனை பேரணிகள்
நடந்தாலும்
முன்னெடுத்துச்
செல்வதென்னவோ
நீ வைத்த அடிதான்!


எத்தனை அடக்குமுறை
ஏவப்பட்டாலும்
முந்தி இழுப்பதென்னவோ
விட்டுவிடாத உன் பிடி தான்!

எத்தனை அடிகள் எத்தனை இடிகள்
எத்தனை எத்தனை வந்தாலும்
எதிர்த்து நிற்கும் வீரம் தரித்தது
நீ வளர்த்த இயக்கச் செடிகள்!

காற்று இலைகளோடு
பேசிகொண்டிருக்கையில்...
கடலலைகள் கரைகளோடு
மோதிக் கொண்டிருக்கையில்...
நீ மட்டும் மீளாத் துயில்
போய்விட்டாய் என்பதெல்லாம்
இங்கே வெறும் தோற்றப் பிழைகள்!

**மு.அன்பரசு** மாநிலத் தலைவர், TNGEA

**கலந்துரையாடல்**



தோழர் ஞானகுரு

# இயக்கத்தின் ஆணிவேர்கள்

தோழர் ஞானகுரு அரசு ஊழியர் இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவர். மாணவ பருவத்திலேயே சமூக விழிப்புணர்வு கொண்டு அதன் காரணமாக தொழிற்சங்கத்திற்கு ஈர்க்கப்பட்டு அரசு ஊழியர் இயக்கத்தில் பல பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு இயக்கத்தை திறம்பட நடத்தியவர். அவரின் எண்ணம், சொல், செயல் எல்லாமே இன்றுவரை மிடுக்காதத்தான் இருக்கிறது. அவருடைய வார்த்தைகளில் தீர்க்கம் தெரிகிறது. அவருடைய அனுபவங்கள் நமக்கு நிச்சயம் ஏதேனும் ஒரு வகையில் பயனளிக்கும் என்ற நோக்கில் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தோம் எதிர்பார்த்ததை விட அதிகமாகவே அவருடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டோம். அவற்றில் ஒரு சிலவற்றை நாம் இங்கே பதிவிடுகிறோம். அவர் பேசியதை அவர் பேசியவாறே பிரசுரித்திருக்கிறோம்.

“மாணவனாக இருந்த காலத்தில் மூட நம்பிக்கைகள் பற்றி நானும் என்னுடன் சிலபேரும் கிராமங்களில் சென்று அறிவியல் பூர்வமாக விளக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்த காசிநாதன் என்ற ஏஐடிசியு தலைவர், ''மூட நம்பிக்கைகளைப் பற்றி பேசுவது நல்லதுதான் ஆனால் அதைவிட முக்கியமானது சாமானிய மக்கள் விழிப்புணர்வு பெறவும் வாழ்வில் முன்னேற்றம் காணவும் நாம் செயலாற்றுவது அவசியம்.'' என்றார். அவருடன் பழக்கம் ஏற்பட்டு அதன்பிறகு அவருடன் கிராமம் கிராமமாக சென்று சாமானிய மக்கள் படும் துயர்களை நேரில் பார்த்தேன். நான் வசதியான குடும்பத்திலிருந்து வந்ததால் சாமானிய மக்கள் படும் துயரை நேரில் பார்த்து அதிர்ந்து போனேன். அதன்மூலம்தான் எனக்கு சமூக விழிப்புணர்வு ஏற்பட்டது. 1969ல் டிசம்பரில் அரசுப் பணியில் சேர்ந்தேன். அங்கே ஒரு நண்பர் மூலமாக என்ஜிஓ யூனியனைப் பற்றி கேள்விப்பட்டேன். அவர் மூலம் என்ஜிஓ அலுவலகத்துக்குப்போனேன் இப்படித்தான் சங்கத்துடன் எனக்கு தொடர்பு ஏற்பட்டது.

நான் அரசுப்பணியில் சேர்வதற்கு முன்பும் சேர்ந்தபோதும் கழுத்தில் உத்திராட்சக் கொட்டையும், நெற்றியில் பட்டையும் அடித்துக்கொண்டு அலுவலகம் முதல் எல்லா இடங்களுக்கும் சென்று வந்துகொண்டிருந்தேன். சமூக இயக்கத்தில் என்னை உட்படுத்திக்கொண்டு சமூக தத்துவங்களை தொழிற்சங்க இலக்கணங்களை அறிந்து கொள்ள ஆரம்பித்த பின்னர் திருநீர்பட்டை போடுவது தானாக குறைந்து போனது. நான் பட்டை அடித்துக்கொண்டு உத்திராட்சக் கொட்டை மாட்டிக் கொண்டிருந்ததால் இயக்கத்தில் என்னை உறுப்பினராக சேர்ப்பதற்கு எதிர்ப்பு கிளம்பியது. நான் பட்டை அடித்துக்கொண்டு உத்திராட்சக்கொட்டை மாட்டிக்கொண்டு அதே நேரத்தில் இயக்கத்திற்காகவும் உழைப்பது போல் நாடகமாடுவதாக பலபேர் என்னிடம் நேரடியாகவே தெரிவித்தார்கள். ''நீ சங்கத்தின் ஆதரவாளனாக வெளியிலேயே இருந்து விட்டுப் போ. இவற்றையெல்லாம் செய்து கொண்டு சங்கத்தில் உறுப்பினராக சேர முடியாது'' என்றார்கள். அப்போது எம். ஆர். வெங்கட்ராமன் என்றொரு தலைவர் சொன்னார் ''இந்த நாட்டில் 100க்கு 99.99 சதவீதம் பேர் பக்தி, ஆன்மிகம் என்று




ஏதாவது ஒன்றில் தீவிரமாக இருந்து கொண்டு சங்கத்திற்கும் பங்களிப்பு செய்ய வருவார்கள். அதனால் அவர்களை இயக்கத்தில் சேர்க்காமல் விட்டுவிட முடியாது. அத்தகைய தோழர்களை இயக்கத்திற்கு கொண்டு வந்து அவர்கள் மனதில், எண்ணத்தில், செயலில் படிப்படியாக மாற்றத்தை ஏற்படுத்தினால் அவர்களாகவே தங்கள் பழக்கத்திலிருந்து மாறி தொழிற்சங்க இயக்கத்தில் ஒன்றி விடுவார்கள் அதனால் அவரை இயக்கத்தில் சேர்த்துக் கொள்வதில் தவறில்லை.'' என்றார்

தொழிற்சங்க இயக்கத்தில் சேர்ந்த பின்னர் அவர் மூலமாக சார்பியல் தத்துவங்கள், மூலதனம், அரசியல், பொருளாதாரம் போன்ற பல்வேறு புத்தகங்களை படிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அவற்றின் பிரதிபலிப்புதான் என்னை முழு சங்கவாதியாக மாற்றியது. மதுரையிலிருந்து செல்லம்பட்டி என்ற பஞ்சாயத்து யூனியக்கு எனக்கு இடமாறுதல் வந்தது. அங்கே போனபோது அங்கே ஒரு என்ஜிஓ யூனியன் கிளையை உருவாக்கி நடத்திடும் வாய்ப்பு கிட்டியது. 1971, 72களில் என்ஜிஓ யூனியனில் தோழர் எம்.ஆர்.அப்பன் ஏற்படுத்திய நடவடிக்கைக் குழு இருந்தது. அதில் நானும் பல உறுப்பினர்களும் ஆதரவாளர்களாக இருந்தோம். அப்போது சிவ இளங்கோவின் தீவிர ஆதரவாளராக மதுரையில் இருந்த சிவநேசன் மதுரையில் இருந்த சங்க கட்டிடத்தில் இருந்து நடவடிக்கைக் குழு ஆதரவாளர்களை வெளியேற்ற ஒரு கலாட்டா செய்து தகராறு நடந்து அதில் பலபேருக்கு காயம் ஏற்பட்டது. எனக்கும் தலையில் அடிபட்டது. அந்த காலகட்டத்தில் சங்க கட்டிடத்தில் இயங்கி வந்த ஒரே குழுவாக இருந்தது மதுரையில் இருந்து செயல்பட்டு வந்த என்ஜிஓ ஆக்டிங் கமிட்டி மட்டும்தான். இந்த கமிட்டி என்ஜிஓ யூனியனில் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் ஊழியர்கள் நலன்களுக்கு எதிராக செயல்பட்டதால் ஏற்பட்ட ஒன்றாகும். என்ஜிஓ யூனியன் தேர்தல் 1978ல் வந்தது. அப்போது ஆக்ஷன் கமிட்டியை கலைத்துவிட்டு என்ஜிஓ சங்கத் தேர்தலில் பங்கேற்பது என முடிவானது. என்ஜிஓ சங்கத் தேர்தலில் எங்கள் அணி தோற்றுப்போனது. அதன்பிறகு திண்டுக்கல்லில் பல தோழர்களை தொடர்பு கொண்டு அங்கு ஒரு டீமை உருவாக்கி என்ஜிஓ ஆக்ஷன் கமிட்டியை உருவாக்கி அதிலிருந்து செயல்பட ஆரம்பித்தோம். அந்த அமைப்பிலிருந்து வந்தவர்கள்தான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தோழர் பாலசுப்பிரமணியன், ஜெகதீசன் போன்றவர்கள். அந்த இயக்கம் தொடர்ந்து வலுப்பெற்று அரசு ஊழியர் சங்கமாக விரிந்தது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் துவக்கப்பட்டபிறகு அதில் வடசென்னை மாவட்டத்தின் பகுதிக்குழு செயலாளராக இருந்தேன். அதன்பிறகு மாவட்ட இணைச்செயலாளராக ஆனேன். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சென்னை மாவட்டம் வடசென்னை தென்சென்னை என இரண்டுமாவட்டங்களாக பிரிந்து அதில் நான் தென்சென்னை மாவட்டத்தின் செயலாளராக செயல்படும் வாய்ப்பு கிட்டியது. அதன்பிறகு படிப்படியாக உயர்ந்தேன்.

அப்போதெல்லாம் ஊழியர்களுக்கு பல பிரச்னைகள்,தொந்தரவுகள் இருந்தன. அரசு ஊழியர்களிடம் சங்கத்தின் மீது நம்பிக்கை ஏற்படுத்தவும் பிரச்சனைகளை தீர்க்கவும் ஊழியர் ஒற்றுமையை கட்டமைப்பது முக்கியம் என்று சங்கத்தில் முடிவு செய்து நாங்கள் ஒரு 10 பேர் ஒன்றாக போய் ஒவ்வொரு அரசு அலுவலகத்திற்குள்ளும் நுழைந்து அலுவலக கட்டிடத்தின் மையப்பகுதியல் நின்றுகொண்டு ஊழியர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வோம்.அவர்கள் ஏன் அரசு ஊழியர்கள் சங்கத்தில் உறுப்பினராக வேண்டும்? என்றும் நம்முடைய பிரச்னைகளை தீர்க்க என்ன் வழி என்றும் கட்டிடம் கட்டிடமாக சென்று பிரச்சாரம் செய்வோம். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் என்ற கோரிக்கையை முன் வைத்து பிரச்சாரம் மேற்கொண்டபோது மற்ற சங்கங்கள் அதற்கெல்லாம் ஒருபோதும் சாத்தியமில்லை என்றார்கள். நாங்கள் ஊழியர்களை நேரடியாக சந்தித்து ஒவ்வொரு அலுவலகமாகச் சென்று பிரச்சாரம் செய்தோம். அகில இந்திய சராசரயில் இன்று நாம் 26ஆவது இடத்தில் வந்திருக்கிறோம். அதற்கு என்ன காரணம்? நம்முடைய இளகிய மனநிலை. அவற்றையெல்லாம் நாம் மீட்டெடுக்கவில்லை என்றால் இந்தியாவிலே மிகக்குறைந்த சம்பளம் வாங்கக்கூடிய அரசு ஊழியர்களாக ஆகிவிடுவோம் என்றெல்லாம் பிரச்சாரம் செய்வோம். தோழர் ரூபன் என்பவர் டிஎம்எஸ்-ல் இருந்தார். அவர்தான் இத்தகையதொரு பிரச்சார முறையை முதன்முதலில் ஆரம்பித்து வைத்தார். அவர் அரசு அலுவலகத்திற்குள் ஊழியர்கள் பணி செய்து கொண்டிருந்தவர்கள் நடுவில் ’சார் ஒரு நிமிடம்...’’ என ஆரம்பித்து அரசு ஊழியர்கள் சந்தித்துக்கொண்டிருக்கும் பிரனைகளை எடுத்துரைப்பார். அதை எவ்வாறு தீர்க்க முடியும் என்றும் அதற்கு முழுமுதற் தேவை ஊழியர்கள் ஒற்றுமை என்பதை வலியுறுத்துவார். இவ்வாறு பிரச்சாரங்கள் மேற்கொண்டு ஊழியர்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்தியதன் காரணமாக திமுகவின் கோட்டை என்று அறியப்பட்ட இடங்களில் எல்லாம் அரசு ஊழியர் சங்கம் அரசு ஊழியர்கள் மத்தியில் வெகுவாக வளர ஆரம்பித்தது. அதன்பிறகு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் கேட்டு கருத்தரங்கம் நடத்தினோம். அதன்பிறகு அதை வலியுறுத்தி வேலைநிறுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. வேலை நிறுத்தத்திற்கு தமிழகத்தில் உள்ள அனைத்து ஊழியர்களையும் அழைப்பதில் நிதி பற்றாக்குறை உள்ளிட்ட பல சிரமங்கள் இருந்தன. இந்த வேலை நிறுத்தம் வெற்றிபெறுமா என்றெல்லாம்கூட நிர்வாகிகள் சிலபேருக்கு சந்தேகம் இருந்தது. ஆனால் நாங்கள் எதிர்பாராத வகையில் அரசுத்துறைகளில் உள்ள உழியர்கள் வேலைநிறுத்த ஆயத்த மாநாடு மற்றும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு நிதி வழங்கினார்கள். அவர்களுக்கெல்லாம் இனிமேல் என்ஜிஓ யூனியனை நம்பிப் பயனில்லை என்கிற எண்ணம் தோன்றிவிட்டது. ஏனென்றால் அந்த சமயத்தில்தான் நாம் அரசு ஊழியர்களுக்கு போனஸ் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசிடம் வைத்திருந்தோம். அப்போது என்ஜிஓ யூனியன் தலைவராக இருந்த சிவ.இளங்கோ நாமெல்லாம் என்ன தொழிற்சாலையிலா வேலை செய்கிறோம் போனஸ் கேட்பதற்கு? இதெல்லாம் அதீதமான கோரிக்கை. நிறைவேற்ற முடியாக கோரிக்கைகளை வைத்து அரசு ஊழியர்களை அரசு ஊழியர் சங்கம் ஏமாற்றுவதாக பேசினார். அவர் அப்படி சொன்ன மூன்று மாத காலத்திலேயே போனஸ் வாங்கினோம்.

இந்த நடவடிக்கைக்குப் பிறகு அரசு ஊழியர் சங்கத்திற்கு ஊழியர்கள் மத்தியில் ஆதரவு பெருகி அதிக அளவில் அரசு ஊழியர்கள் உறுப்பினர்கள் ஆனார்கள்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் கேட்டு வடசென்னையில் ஒரு வேலை நிறுத்த ஆயத்த மாநாடு நடந்தது. தமிழ்நாடு முழுவதும் அது பரபரப்பாக பேசப்பட்டு அதன்பிறகு அதையொட்டி உண்ணாவிரதம், போராட்டங்கள் என தொடர்ந்து அது ஜாக்டோ ஜியோ என்ற கூட்டமைப்பாக வலுப்பெற்றது. கடைசியில் ''இதெல்லாம் நிறைவேற்ற முடியாத கோரிக்கைகள்.'' என்று சொன்னவர்கள் வாயடைத்துப் போகும் வகையில் மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை பெற்றோம். இப்படி நிறைவேற்ற முடியாத கோரிக்கைகள் அதீதமான கோரிக்கைகள் என பிற சங்கத்தின் தலைவர்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாததை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சாதித்துக் காட்டியது. இதன் மூலம் அரசு ஊழியர் சங்கம் ஊழியர்கள் மத்தியிலும் மக்களின் மத்தியிலும் பிரபலமானது.

ஆனால் அந்த காலநேரத்தில் இருந்த அரசியல் சூழல் முக்கியமானது. ஏனென்றால் நம்முடைய போராட்டங்கள் அரசு ஊழியர்களின் ஒற்றுமை இதனால் மட்டுமே வெற்றி கிட்டிவிடவில்லை. அன்றைக்கு இருந்த அரசியல் சூழ்நிலை. காங்கிரஸுக்கு எதிரான மனநிலை இருந்தது. அந்த காலகட்டத்தில் அதாவது 72, 73, 80களில் எல்லாம் தொழிற்சங்க போராட்டங்கள் அதிக அளவில் நடந்தன. அந்த போராட்ட காலத்தில் ஊழியர்கள் மத்தியில் ஊழியர்கள் மட்டத்தில் நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் சென்னை தொழிற்சங்க கூட்டமைப்பு என்ற அமைப்பு ஒன்று இருந்தது (Madras Trade Union Council) அதில் நாமும் இணைந்திருந்தோம். அந்த கூட்டமைப்பின் வேலை என்னவென்றால் கூட்டமைப்பில் பிரச்னைகளை எதிர்கொள்ளும் சங்கங்களுக்காக அனைவரும் போராடுவது. ஊதாரணத்திற்கு பின்னி மில் மூடப்பட்டபோது அந்த நிறுவனத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு ஆதரவாக தொழிற்சங்க கூட்டமைப்பில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தம் நடத்தின. அந்த போராட்டத்தில் அரசு ஊழியர்களும் பங்கேற்றோம். அந்த ஒற்றுமை இருந்ததால் மூடிய மில்லை திறக்க வேண்டிய நிர்ப்பந்தம் பின்னி நிறுவனத்திற்கு ஏற்பட்டது. அதேபோல் 1988ஆம் ஆண்டு நாம் நடத்திய மறியல் போராட்டத்தின்போது கைதான அரசு உழியர்களுக்கு ஆதரவாக தொழிற்சங்க கூட்டமைபிப்பில் இருந்த பல தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள். அரசு ஊழியர்கள் கைது செய்வதை அரசு தவிர்க்க வேண்டும், கைதானவர்களை விடுதலை செய்ய வேண்டும், பேச்சுவார்த்தை மூலம் பிரச்னைகளை தீர்க்க வேண்டும் என்று ஒற்றுமையை, அதன்வலிமையை உலகுக்கு உணர்த்தினார்கள். 1988 வேலை நிறுத்த போராட்டம் வெற்றி பெற்றதற்கு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஒற்றுமை மட்டுமல்ல தமிழகத்தில் இருந்த அனைத்து தொழிற் சங்கங்களின் உழைக்கும் வர்க்கத்தின் ஆதரவும் ஒற்றுமையும் தான் நாம் அவ்வளவு பெரிய வெற்றியை ஈட்டிட உறுதுணையாய் இருந்தது.

ஆக, இன்றைக்கு தொழிற்சங்க ஒற்றுமையும் அதற்கான வேலைகளும் இல்லாமல் அல்லது குறைந்து போய்விட்டதன் காரணமாக நாம் பலவீனமாகி விட்டதாக தோன்றுகிறது. இன்றைய காலகட்டத்தில் தொழிற்சங்க ஒற்றுமை என்பதை தேடி கண்டுபிடிக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளது. மெட்ராஸ் தொழிற்சங்க கூட்டமைப்பு இருந்த போது அதில் கன்வீனராக இருந்தவர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனில் வேலை பார்த்த டி.எஸ். ரங்கராஜன் என்பவர். அவர் இறந்த பிறகு அந்த கூட்டமைப்பு மங்கிபோய்விட்டது. அதற்குக் காரணம் அதில் உறுப்பினர்களாக இருந்த திமுக தொழிலாளர்கள் முன்னேற்றப் பேரவை, ஏஐடியுசி, ஐஎன்டியுசி, எச்எம்எஸ் போன்ற அமைப்புகள் எல்லாரும் கொஞ்சம் கொஞ்சமாக பின்வாங்கிப் போய்விட்டார்கள். இதற்குக் காரணம் 1990க்கு பிறகு வந்த தனியார்மய தாராளமய, உலகமயக்

கோட்பாடுகள் அதன் மூலம் வந்த விளைவுகள். ஆக தொழிற்சாலைகளே இல்லாத ஒரு நிலைக்கு நாம் வந்துவிட்டோம். இந்த நிலையில் புற உலகிலிருந்து நமக்கு ஆதரவு தரக்கூடிய, உதவக்கூடிய தொழிற்சங்கங்கள் இல்லாத நிலையில் நாம் நமது போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். 1989ல் மிகப்பெரிய போராட்டம் ஒன்று நடந்தது. என்ஜிஓ யூனியன் நம்ம சங்கம் எல்லாம் சேர்ந்து ஒருபோராட்டம் நடத்தினோம். பதவி உயர்வு வந்து படிப்படியாக எல்லோருக்கும் வழங்க வேண்டும் என்று. அந்த சமயத்தில் நாராயணன் நிதிச் செயலராக இருந்தார். அவர் ஒவ்வொரு ஊழியருக்கும் பத்து வருடம் முடிந்ததும் அப்கிரடேஷன் தருவதாக ஒப்புக்கொண்டார். ஆனால் அப்படி அப்கிரடேஷன் கொடுக்கும்போது ஒரு இளநிலை உதவியாளர் பதவியை, ரெகுலர் புரமோஷன் இல்லாமல் உதவியாளர் பதவியாக அப்கிரடேஷன் செய்தால் 10 இளநிலை உதவியாளர் பணியிடங்களை சரண்டர் செய்ய வேண்டும் என்றார். அதாவது 10 பணியிடங்கள் காலியாவிடும். அப்படி ஒரு ஒப்பந்தத்தில் துரதிருஷ்டவசமாக ஒற்றுமை என்ற பெயரில் கையெழுத்து போட்டுவிட்டோம். அதன்காரணமாக பல இடங்கள் காலியாகப் போய்விட்டது. அப்கிரடேஷன் அரசாணை ஒவ்வொரு கீழ்நிலை பணியிடங்களில் பத்து பணியிடங்களை காலி செய்துகொண்டே வரும். இது சம்பந்தமாக நாங்கள் எங்களுக்குள் விவாதம் செய்தோம். அது எப்படி தோழர் ஒரு அலுவலகத்தில் ஒரு கண்காணிப்பாளர் இருந்தால் அவருக்கு கீழே ஒரு உதவியாளர், இரண்டு இளநிலை உதவியாளர்கள் ஒரு அலுவலக உதவியாளர் பணியிடங்கள் தவிர்க்கமுடியாதது என்று பல தோழர்கள் வாதம் செய்தனர். ஆனால் அது நடைமுறைக்கு வந்தபிறகு அரசாங்கம் ஆட்சேர்ப்பை நிறுத்திவிட்டது. ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்ட பின்னர் நாம் பேசிய வாதங்கள் எல்லாம் பொய்யாகப் போய் இன்றைக்கு நாம் ஒருபெரிய நெருக்கடியை சந்தித்து கொண்டிருப்பது அலுவலக நிர்வாகத்தை கடுமையாக பாதித்துக்கொண்டிருக்கிறது. தொழில்நுட்ப பிரிவு பணியாளர்களிலாவது தேவைக்கு சில பேர்களை பணிக்கு எடுக்கலாம் ஆனால் ரெகுலராக தற்போது அலுவலக நிர்வாகம் என்பது வலிமையற்ற ஒன்றாக மாறிவிட்டது. இத்தகைய இக்கட்டில்தான் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில்தான் நாம் ஒவ்வொன்றையும் மீட்டுப் பெற வேண்டிய அவசியம் இருக்கிறது.

புதிய ஓய்வூதியத் திட்டம் 2001ல் வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் வந்தது அப்போது மத்திய அமைச்சராக இருந்தவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முரசொலி மாறன். இவர்கள் எல்லாம் சேர்ந்து புதிய ஓய்வூதியத் திட்டத்தை உருவாக்கினார்கள். அதனால் தான் அதை நீக்கிவிட்டு பழைய ஓய்வூதியத் திட்டத்தை கொண்டு வருவதில் தயக்கம் காட்டுகிறது இப்போது இருக்கம் திமுக அரசு. 2003ல் அறிவிக்கப்பட்ட புதிய ஓய்வூதியத் திட்டத்தை முதன்முதலில் டெஸ்ட் கிரவுண்டாக நம்முடைய தமிழகத்தில் பரீட்சித்துப் பார்த்தவர் செல்வி ஜெயலலிதா அவர்கள். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் பயன்பாட்டுக்கு வராத புதிய பென்சன் திட்டத்தை தமிழகத்தில் அமல் படுத்தி மற்ற மாநிலங்களுக்கு அதை அறிவித்துக் காட்டியவர் ஜெயலலிதா. அதன்பிறகுதான் புதிய ஓழ்வூதியத் திட்டம் மற்ற மாநிலங்களுக்கு பரவியது. இப்போது பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வருவதற்கு திமுக அரசு தயக்கம் காட்டுவதற்கு அவர்களுடைய முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கை தடையாக உள்ளது. இதை அவர்கள் அருவெறுப்புடனே பார்க்கிறார்கள். அதிலும் நாம் ஒரு நிலசுவான்தாரை நிதியமைச்சராக வைத்திருக்கிறோம். நிலச்சுவான்தார் நிதியமைச்சராக வந்தபிறகு அதை அவர் வேறு எப்படி பார்ப்பார்? அதனால் நாம் மிகப்பெரிய போராட்டங்களை சந்திக்க நேரிடும் நிலைமை உள்ளது. அதிலும் சிபிஎஸ் திட்டத்தில் உள்ள ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை விதைத்து போராட வேண்டிய

அவசியமும் எழுந்துள்ளது. அவர்களுக்கு நம்பிக்கையை உருவாக்க நாம் தான் போராட வேண்டும் என்ற நிலை வந்தாகிவிட்டது. இதேபோல் பல்கலைக்கழக ஊழியர்கள், போக்குவரத்து தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மின்வாரிய ஊழியர்கள் மற்றும் பொதுத்துறை உழியர்கள் என பல்வேறு துறைகளில் உள்ளவர்களுக்கும் பிரச்னைகள் உள்ளன. இவர்களையெல்லாம் ஒன்று சேர்த்து படிப்படியாக ஒவ்வொரு இயக்கமாக முன்னெடுத்து ஒற்றுமையைக் கட்டமைத்து போராட்டங்களை வடிவமைத்தால் நிச்சயமாக நம்மால் பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறமுடியும். ஏனென்றால் புதிய ஓழ்வுதியத் திட்டத்தில் இன்னும் பணம் செலுத்தப்படவில்லை. அது ஒரு செயலற்ற நிலையில் உள்ளது. அதேபோல அரசாங்கமும் தெரிந்தோ தெரியாமலோ வாக்குறுதி கொடுத்துவிட்டது. அதை அமல்படுத்த வேண்டும் என்று சொல்கிற நியாயமும் நம்மிடம் உள்ளது. அப்படி அந்த நியாயத்தை அமல் படுத்துவதற்கு நம்முடைய போராட்டங்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களோடு மட்டும் நிற்காமல் இதற்கு முன்பு பொதுத்துறையில் யாரெல்லாம் பென்சன் வாங்கிக் கொண்டிருந்தார்களோ அவர்களையெல்லாம் சேர்த்து நாம் ஒரு இயக்கமாக போராட்டங்களை முன்னெடுத்தால் அது அரசாங்கத்துக்கு நிர்ப்பந்தத்தை உருவாக்கும். அப்படிப்பட்ட நிர்பந்தத்தின் மூலம் நாம் நம்முடைய உரிமைகளை நிச்சயம் வெல்ல முடியும்.”

*(தொடரும்)*

**கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள்:** 1. மு. அன்பரசு, தலைவர், சா.கோதண்டபாணி, உ.சுமதி, சா.டானியல் ஜெயசிங், மற்றும் அ.குபேரன் மாநிலச் செயலாளர்கள், தெ. வாசுகி, துணை பொதுச் செயலாளர்கள் தொழில்நுட்ப உதவி: ச. முத்துக்குமாரசாமிவேல், மாநில செயற்குழு உறுப்பினர் (தென்சென்னை)

**நிகழ்ச்சித் தொகுப்பு :** ஜிஜி

**நிகழ்ச்சி ஏற்பாடு:** ஆசிரியர் குழு, அரசு ஊழியர் மாத இதழ்




**நீங்க ஒரு வாசகம் சொன்னாலும் அது திருவாசகம் தான்!**

அட்டைப்படக் கார்ட்டூன் அசத்தலாக இருந்தது அக்னிபாதை, வேலைவாய்ப்பின்மை பெட்ரோல், டீசல் விலை உயர்வு, தனியார்மயம், பொருளாதார வீழ்ச்சி போன்றவை இந்தியாவை தலைகீழாக புரட்டிப் போட்டுள்ளது என்பதை பாமரருக்கும் புரியும்படி பதிவிட்டு இருந்தத பாராட்டுக்குரியது.

**– கலியராயன், சின்னசேலம்**

“குடிக்கிறது கூழு கொப்பளிக்கிறது பன்னீரு!” “பேரு பெத்த பேரு லோன ஏமி லேது.” தோழர் அத்துடன் இதையும் சேர்த்துகோங்க “ஊருக்கு இளைச்சவன் தமிழ்நாடு அரசு ஊழியன்”. **– ராமதாஸ், பொட்டனேந்தல்**

ஏழுமுனை பிரச்சார ஊழியர் சந்திப்பு இயக்கத்தின் முன்னோட்டமாக இருந்தது பொதுச் செயலாளர் மேசை.

**– மதுபாலா, அத்திமலைப்பட்டு**

சூடா ஒரு கோப்பை சூப் இந்த மாதம் ரொம்ப சூடாவே இருந்தது. இந்தியா இனி யாருக்கு என்ற கேள்விக்கு அதிலேயே பதிலிருக்கிறது தள்ளுவண்டிகாரனிடம்.

**– விஜயகுமாரரவி, திருப்பக்குழி**

தோழர் ஜிஜி.யின் வலைதள செய்திகளை முற்றிலும் நம்பலாமா கட்டுரை விழிப்புணர்வை ஊட்டியது.

**– ராஜசேகரன், முதுகுளத்தூர்**

மின்சார வாரியத்திற்கு ஷாக் கொடுக்கவில்லை. அரசாங்கம் பொது மக்களுக்குத்தான் மின் கட்டணத்தை உயர்த்தி ஷாக் கொடுத்திருக்கிறது. தோழர் இரா. மங்களபாண்டியன் கட்டுரை ‘கரண்ட் டாப்பிக்’ .

**-பி. கணேசன், பெரியபாளையம்**

கழிசடைகள் போன்ற கதைகள் நாட்டுக்கு நிச்சயம் தேவை. எங்கெல்லாம் பணம் கொழிக்கும் தொழில் இருக்கிறதோ அங்கெல்லாம் அரசியல்வாதிகளின் பிள்ளைகள் இருப்பார்கள் என்பதற்கு கழிசடைகள் கதை நற்சான்று **– சங்கரதாஸ், கும்பகோணம்**

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்கள் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர், செம்மலர் இதழின் ஆசிரியர், கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தின் மூத்த முன்னோடி தோழர் கு. சின்னப்பபாரதியின் மறைவு இலக்கிய உலகிற்கும், தொழிற்சங்க இயக்கங்களுக்கும் ஈடுகட்ட முடியாத இழப்பு. முன்னத்தி ஏர் என்று அவரைச் சொல்வது முற்றிலும் பொருத்தமானதே.

**– ராமலட்சுமி, தூத்துக்குடி**

# மாலை நேர தர்ணா போராட்டங்கள்

**நாகப்பட்டினம்**



நாகப்பட்டினம் மாவட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் அனைத்து சங்க போராட்டகுழு சார்பில் (26.07.22 ) நாகை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடம் முன்பு, மாவட்டத் தலைவர் பா.ராணி தலைமையில் மாலைநேர தர்ணா நடைபெற்றது. நாகை வட்டத் தலைவர் எஸ். இரவிச்சந்திரன் வரவேற்புரையாற்றினார்.

கீழ்வேளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகைமாலி துவக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் கோரிக்கைகள் விளக்கவுரையாற்றினார். ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கத் தலைவர் வி. பாலசுப்பிரமணியன், ஓய்வூதியர் சங்கத் தலைவர் எம்.பி.குணசேகரன், சத்துணவு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் கே. இராஜூ, ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் ஆர். முத்துகிருஷ்ணன், புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க தலைவர் விஜயகுமார், மாவட்ட இணைச் செயலாளர் ஜெ. ஜம்ருத்நிஷா உள்ளிட்ட பலர் உரையாற்றினர். மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன்சேரல் நன்றியுரையாற்றினார்.

அகவிலைப்படி உயர்வு, சரண்டர் மீண்டும் வழங்குதல், புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து, காலிப்பணியிடங்களை நிரப்புதல், சத்துணவு ஊழியர்களுக்கு ஊதியக்குழுவில் வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. 120 பெண்கள் உட்பட 160-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் தர்ணாவில் பங்கேற்றனர்.

**ஈரோடு**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பதிவு எண்.237/84 ஈரோடு மாவட்ட மையம். இன்று மாலை ஈரோடு மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் நடைபெற்ற தர்ணா போராட்டத்தில் 72 பெண்கள் உட்பட 212 பேர் பங்கேற்றனர். தர்ணா போராட்டத்திற்கு மாவட்டத் தலைவர் தோழர் A.ராக்கிமுத்து தலைமை வகித்தார். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் தோழர் குருராகவேந்திரன் துவக்கவுரை நிகழ்த்தினார். மாவட்டச் செயலாளர் தோழர் ச.விஜயமனோகரன் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்.

வாழ்த்துரை: தோழர் ஆ.இளங்கோவன் மாவட்டச் செயலாளர் தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம் தோழர் S.பிரகாஷ் மாநில துணைத் தலைவர் தமிழ்நாடு நீதித்துறை அலுவலர்கள் சங்கம் தோழர் செ.சிவசுப்ரமணியம் மாவட்டச் செயலாளர் தமிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கம் தோழர் அர்னால்டு மாவட்டத் துணைத் தலைவர் எம்ஆர்பி செவிலியர்கள் மேம்பாட்டுச் சங்கம் ஆகியோர் வழங்கினர்.

நிறைவுரை: தோழர் மு.சீனிவாசன் ஆற்றினார். நன்றியுரை: தோழர் R.சுமதி மேலும் தோழர் M.மகாலிங்கம் மாநில செயலாளர் தமிழ்நாடு பேரூராட்சி அலுவலர்கள் சங்கம் தோழர் து.சிவஞானம்

மாவட்டத் தலைவர் வேளாண்மைத்துறை அமைச்சுப் பணியாளர் சங்கம் தோழர் K.மனோகரன் மாநில இணைச்செயலாளர் தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் முன்னேற்ற சங்கம் தோழர் M.கண்ணன் மாவட்டச் செயலாளர் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் தோழர் M. சந்திரமௌலி மாவட்டச் செயலாளர் தமிழ்நாடு ஒருங்கிணைந்த இந்திய முறை மருத்துவமனை பணியாளர்கள் சங்கம் தோழர் தி.மகேந்திரன் மாவட்டச் செயலாளர் தமிழ்நாடு ஒருங்கிணைந்த இந்திய முறை மருந்தாகும் சங்கம் தோழர் P.பழனிவேல் மாவட்டச் செயலாளர் தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்கம் தோழர் அ. அருந்தவச்செல்வன் மாவட்டத் தலைவர் பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் சங்கம் தோழர் விஷ்ணுபிரியா மாவட்ட தொழில்நெறி வழிகாட்டி மையம் (முன்னாள் வேலைவாய்ப்பு அலுவலகம்)

**மயிலாடுதுறை**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் பழைய பென்சன், சரண்டர், DA உள்ளிட்ட நிலுவை கோரிக்கைகளை வலியுறுத்தி மாலைநேர தர்ணா போராட்டம் இன்று (26.07.2022) மாலை 05.00 மணி முதல் இரவு 07.30 மணி வரை மாவட்டத் தலைவர் தோழர் R. சிவபழனி தலைமையில் நடைபெற்றது. மயிலாடுதுறை வட்ட செயலாளர் தோழர் T.அருண்ஜோஷி வரவேற்புரையாற்றினார். CITU மாவட்டச் செயலாளர் தோழர் R. ராவீந்திரன் துவக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் தோழர் D.இளவரசன் கோரிக்கைகளை விளக்கி பேசினார். மேனாள் மாவட்டத் தலைவர் தோழர் D.கணேசன், மேனாள் மாவட்ட துணைத் தலைவர் தோழர் M.நடராஜன், TNGPA மாவட்டப் பொருளாளர் தோழர் R.ராதாகிருஷ்ணன், TNROA மேனாள் மாவட்டத் தலைவர் தோழர் R.ராமானுஜம், TNROA மாவட்டத் தலைவர் தோழர் S. தென்னரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். CITU மாவட்டத் தலைவர் தோழர் சீனி. மணி நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் தோழர் R.கலா நன்றி கூறினார்.

தர்ணா போராட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம், தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்கம், தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு, தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம், தமிழ்நாடு நகராட்சி, மாநகராட்சி ஊழியர் சங்கம் ஆகிய துரைவாரி சங்க, தோழமை சங்க தோழர்களுக்கு TNGEA மயிலாடுதுறை மாவட்ட மையத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். தர்ணாவில் பெண்கள் 43 ஆண்கள் 51 மொத்தம் 94 தோழர்கள் பங்கேற்றனர். மாவட்டச் செயலாளர், TNGEA, மயிலாடுதுறை.

**திருச்சிராப்பள்ளி**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருச்சிராப்பள்ளி மாவட்டம். 26.07.2022 மாலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தலைவர் முனைவர் கா. பால் பாண்டி தலைமையில் தர்ணா போராட்டம் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் சகாதேவன் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதிய சங்க கூட்டமைப்பு மாவட்ட தலைவர்

சிராஜுதின் தர்ணா போராட்டத்தை துவக்கி வைத்தார்.

மாவட்ட செயலாளர் P.பழனிச்சாமி கோரிக்கை விளக்க உரை ஆற்றினார். தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் சத்தியவாணி, தமிழ்நாடு கூட்டுறவு துறை ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் பீட்டர் லியனோட், நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் சக்திவேல், தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் ரஞ்சித் குமார், தமிழ்நாடு ஆய்வக நுட்பனர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஆனந்தலட்சுமி, தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலக சங்கத்தின் மாவட்ட செயலாளர் பிரேம்குமார், தமிழ்நாடு அரசு தொழிற்பயிற்சி அலுவலர் சங்க மாவட்ட பொருளாளர் உமர் பரூக், தமிழ்நாடு ரேடியோலாஜிகல் அசிஸ்டெண்ட் சங்கம் மெட்ராஸ் மாநிலத் தலைவர் சுரேஷ் பிரபு, தமிழ்நாடு பட்டு வளர்ச்சி துறை ஊழியர் சங்கத்தின் பெருமாள்ராஜ், தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கத்தில் வெங்கடேஷ் பாபு, தொழிலாளர் நலத்துறை வரதராஜன், திருச்சி 1 வட்டக் கிளை பொருளாளர் பாரதி, திருச்சி 2 வட்டக்கிளை தலைவர் தோழர் வினோத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தமிழ்நாட்டின் மாநிலத் துணைத் தலைவர் ஏ. பெரியசாமி நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் சுந்தர்ராஜ் நன்றியுரை ஆற்றினார். போராட்டத்தில் மாவட்ட இணை செயலாளர்கள் பாபு, அல்போன்ஸ், அமுதவல்லி மாநில செயற்குழு உறுப்பினர் ராம்ராஜ், அனைத்து துறை ஓய்வூதிய சங்க மாவட்ட தலைவர் செந்தமிழ் செல்வன், வட்ட,மாவட்ட நிர்வாகிகள் மற்றும் அனைத்து துறை ஊழியர்களும் திரளாக கலந்து கொண்டார்கள். 48 பெண்கள் உள்பட 98 பேர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி**



தருமபுரி பழைய பென்சனை அமல்படுத்த கோரி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தர்ணா போராட்டம் நடைபெற்றது. புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியம் வழங்க வேண்டும் சிறப்பு காலமுறை ஊதியத்தில் 40 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் சத்துணவு அங்கன்வாடி ஊழியர்கள் வருவாய் கிராம உதவியாளர்கள் ஊர்ப்புற நூலகர்கள் வன பாதுகாவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் ஊராட்சி பேரூராட்சி நகராட்சி மாநகராட்சி ஊழியர்களுக்கு கருவூலம் மூலம் ஊதியம் வழங்க வேண்டும்

அரசுத் துறைகளில் அத்து கூலிக் முறையில் ஊர்ப்புற நூலகர்கள் எம்.ஆர்.பி செவிலியர்கள் கணினி இயக்குனர்கள் வட்டார மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட தொகுப்பூதியம் மதிப்பூதியம் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் மூன்றரை லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். மத்திய அரசு ஊழியர்களுக்கு 1.1 2022 முதல் 3 சதவீத அகவிலைப்படி அறிவித்துள்ளது . அதுபோல் மாநில அரசு ஊழியர்களுக்கும் 3 சதவீத அகவிலைப் படியை தமிழக அரசு உடனடியாக வழங்க வேண்டும். கொரோனாவை காரணம் காட்டி 2 ஆண்டுகள் முடக்கப்பட்ட சரண் விடுப்பு ஒப்புவிப்பு மேலும் காலம் குறிப்பிடாமல் தடை செய்ததை உடன் திரும்ப வழங்க வேண்டும். சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்க

காலத்தை பணி வரன்முறை செய்திட வேண்டும்.

தமிழக அரசு துறைகளில் காலியாக உள்ள 4 லட்சத்திற்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களை போர்க்கால அடிப்படையில் நிரப்பிட வேண்டும்.

இருபத்தி ஒரு மாத ஊதியம் மாற்ற நிலுவையை வழங்கிட வேண்டும். புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும் .இரண்டு ஆண்டுகளாக விடுவிக்கப்படாத கொரோனா சிகிச்சைக்கான தொகையை உடனே விடுவிக்க வேண்டும். கொரோனா காலத்தில் இறந்த அரசு ஊழியர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு நிபந்தனையின்றி கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார் மாநில துணைத்தலைவர் கோ. பழனியம்மாள்,மாவட்ட செயலாளர் ஏ.சேகர் மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி மகளிர்துணைக்குழு மாவட்ட அமைப்பாளர் பி.எஸ். இளவேணில் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிபேசினர். தமிழ்நாடு ஊரக வளர்ச்சி அலுவலர் சங்க மாவட்ட செயலாளர் சங்கர்,தமிழ்நாடு நில அளவை ஒன்றிப்பின் மாவட்ட தலைவர்கல்பனா தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாநில செயலாளர் பி.மகேஸ்வரி,தமிழ்நாடு வேளாண்மைப் துறை அமைச்சு பணியாளர் சங்க மாவட்ட தலைவர் ஆர்.ஜெயவேல் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாவட்ட தலைவர் பி.சி.குமார் தமிழ் நாடு பொதுநூலகத்துறை அலுவலர் சங்க மாநிலதலைவர பிரபாகரன்தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர் சங்க மண்டல செயலாளர் யாரப்பாஷா ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

**தஞ்சாவூர்**



இன்று தஞ்சையில் நடைபெற்ற மாலை நேர தர்ணா போராட்டத்திற்கு மாவட்ட தலைவர் சிவ ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் ஆர். கலியமூர்த்தி துவக்க உரையாற்றினார். மாவட்ட செயலாளர் ஆ.ரெங்கசாமி விளக்க உரையாற்றினார். தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில செயலாளர். பா. ரவிச்சந்திரன், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்க மாவட்ட தலைவர் எம் ராமச்சந்திரன் மற்றும் முன்னாள் மாநில செயலாளர் ஆர்.பன்னீர்செல்வம் உள்ளிட்ட பல்வேறு தோழமைச் சங்க துறை வாரிச் சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநிலச் செயலாளர் எஸ். கோதண்டபாணி நிறைவுரை ஆற்றினார். மாவட்ட பொருளாளர் கே.பாஸ்கரன் நன்றி கூறினார். இன்றைய மாலை நேர தர்ணா போராட்டத்தில் 115 பெண்களும் 140 ஆண்களும் என மொத்தம் 255 பேர் பங்கேற்றனர்.

**காஞ்சிபுரம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் காஞ்சிபுரம் மாவட்ட மையம் மாநிலச் செயற்குழு முடிவின்படி மாநிலம் தழுவிய மாவட்டத் தலைநகர் மாலை நேர தர்ணா போராட்டம் 26-07-2022 மாலை 05-00 மணியளவில் காவலான் கேட் காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. தலைமை: தோழர் வே.குமார் மாவட்ட பொருளாளர். வரவேற்புரை: தோழர் S.ரமேஷ் மாவட்ட




இணை செயலாளர் துவக்க உரை: தோழர் வெ.லெனின் மாநில பொருளாளர் தமிழ்நாடு கருவூல கணக்குத் துறை கோரிக்கை விளக்க உரை தோழர் துரை. மருதன் மாவட்ட செயலாளர்.

வாழ்த்துரை: தோழர் K.ஜெயக்குமார் முன்னாள் மாவட்ட செயலாளர் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் தோழர் S.பாலு மாவட்டத் தலைவர் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் தோழர் T.ரமேஷ் மாவட்டத் தலைவர் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் தோழர் A.ரமேஷ் மாவட்ட துணைத்தலைவர் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் தோழர் Y.சீதாராமன் மாவட்ட செயலாளர் முன்னாள் அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் நிறைவுரை தோழர் வெ.தென்னரசு மாவட்டத் தலைவர் அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் நன்றியுரை M.R.திலகவதி மாவட்ட துணைத்தலைவர் 47+59. 106 மொத்தம் தோழர்கள் கலந்து கொண்டனர் தர்ணா போராட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது

**பெரம்பலூர்**



பெரம்பலூர் மாவட்ட தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கத்தின் சார்பாக இன்று (26.07.2022) மாலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக தர்ணா ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்பாட்டத்திற்கு அரசு ஊழியர்கள் சங்க மாவட்ட தலைவர் தோழர்.குமரிஅனந்தன் தலைமையில் நடைபெற்றது. கோரிக்கைகளை விளக்கி மாவட்ட செயலாளர் தோழர்.மரியதாஸ் விளக்கவுரையாற்றினார். இதில் 50-க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதில் வருவாயத்துறையைச் சார்ந்த பாரதிவளவன், கதிர், புகழேந்தி, மருந்தாளுநர் சங்க மாநில துணைத்தலைவர் ராஜராஜன், சாலைப்பணியாளர்கள் சங்க சுப்ரமணியன், ராஜ்குமார், எம்.ஆர்.பி. செவிலியர் சங்க சகுந்தலா, ஊரக வளர்ச்சித்துறைச் சார்ந்த சக்திவேல், கௌதமன், சுகதேவ், கூட்டுறவு ஊழியர் சங்க நிர்வாகிகள் விஸ்வநாதன், சமரசம், ரமேஷ், சின்னசாமி, மாநில செயற்குழு உறுப்பினர் சுப்ரமணியன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் தோழர்.தெய்வராஜா நன்றியுரையாற்றினார்.

**கோவை**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக தமிழக முழுவதும் மாலை நேர தர்ணா போராட்டம் நடத்துவது என்ற அடிப்படையில் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு 26.07.2022 இன்று கொட்டும் மழையிலும் பெருந்திரளான ஊழியர்கள் கலந்து கொண்ட மாலை தர்ணா போராட்டம் தோழர் - S.ஜெகநாதன் - மாவட்ட தலைவர் (பொறுப்பு) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரை: தோழர் சாமிநாதன் - மாவட்ட துணைத்தலைவர் கோரிக்கை விளக்க உரை: தோழர் செந்தில்குமார் மாவட்ட செயலாளர் துவக்கவுரை : தோழர்

*பழனிசாமி - மாவட்ட துணைத் தலைவர்-TNGPA நிறைவுரை: தோழர் R. மகேஸ்வரன் - மாவட்ட பொதுச் செயலாளர்- அகில இந்திய வங்கி ஊழியர் சம்மேளனம் கோவை நன்றியுரை: P. நடராஜன் மாவட்ட பொருளாளர்*

**தூத்துக்குடி**



*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மைய முடிவின்படி தமிழக முதல்வர் அவர்களின் மௌனம் கலைக்கும் தர்ணா போராட்டத்தினை மழையின் காரணமாக ஆர்ப்பாட்டமாக நடைபெற்றது மாவட்ட தலைவர் தோழர் து.செந்தூர்ராஜன் அவர்கள் தலைமையேற்று நடத்தினார் மாவட்ட செயலாளர் தே. முருகன் அவர்கள் கோரிக்கை விளக்கவுரை வழங்கினார் தோழர் சிவஞானம் மாவட்ட செயலாளர் MUTA மற்றும் தோழர் ஞா.சேகர் மாநில அமைப்பு செயலாளர் தமிழ்நாடு மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள் கழகம் சிறப்புரையாற்றினார்கள் தோழர் என்.வெங்கடேசன் நிறைவுரை வழங்கினார் தோழர் அண்ணாமலை பரமசிவன் மாநில செயற்குழு உறுப்பினர் அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள்.*

**கன்னியாகுமரி**



*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவின் படி 26 .7 .2022 மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற மாநில அளவிலான மாலை நேர தர்ணா போராட்டத்தை மாவட்டத் தலைவர் தோழர் .என். பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார் வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் தோழர். மணிகண்டன் மற்றும் எம். ஆர் .பி செவிலியர் மேம்பாட்டு சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் என். சுபின் மற்றும் கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் தோழர். பரித் மற்றும் மாவட்டத் துணைத் தலைவர் தோழர் . எஸ். லீடன்ஸ்டோன்மற்றும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்ட செயலாளர் தோழர். ஆர் .சுரேஷ் ஆகியோர் கண்டன உரையாற்றினர் தர்ணா போராட்டத்தை மாநில துணைத்தலைவர் தோழர் .சி.எஸ் கிறிஸ்டோபர் நிறைவுரையாற்றி நிறைவு செய்தார் ஒன்பது பெண் தோழர்கள் உட்பட 69 ஊழியர்கள் கலந்து கொண்டனர்.*




காஞ்சிபுரம்



திருவண்ணாமலை



தென்காசி



திண்டுக்கல்



திருநெல்வேலி



தேனி




வட சென்னை



சிவகங்கை



புதுக்கோட்டை



கரூர்




கள்ளக்குறிச்சி



நீலகிரி




விழுப்புரம்




நாமக்கல்



கடலூர்



திருவள்ளூர்



தென் சென்னை


சேலம்



வேலூர்

# ஜூலை 2 எழுச்சி நாள் கருத்தரங்கம்


வேலூர்


நாமக்கல்



திருவாரூர்


நீலகிரி



தூத்துக்குடி


கோயம்புத்தூர்



தஞ்சாவூர்



காஞ்சிபுரம்



திருச்சி



வட/தென் சென்னை



திருவள்ளூர்



திருப்பூர்



செங்கல்பட்டு



ராணிப்பேட்டை




தேனி




புதுக்கோட்டை



திண்டுக்கல்




தர்மபுரி



நாகப்பட்டினம்




திருநெல்வேலி



மதுரை



கிருஷ்ணகிரி



ஈரோடு



விழுப்புரம்




மயிலாடுதுறை



திருவண்ணாமலை



கள்ளக்குறிச்சி

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com